


241. இல்லாத, பொல்லாத அழகு

சூர்ப்பணகையை ராமன் இன்னும் பார்த்துவிட வில்லை. இந்த ஜாலிப்பும் ஜோடிப்பும், இன்னும் கண்ணுக்கு இலக்காகவில்லை. கற்பகத் தருவிலே படர்ந்த பூங்கொடி யொன்று அந்த விண்ணின் தருவை விட்டு மெல்ல நழுவி மண்ணில் ஒரு தருவை நாடுவதுபோல வரும் பெண்கொடி இன்னும் ராமன் கண்ணெதிரே வந்து விடவில்லை. அந்த 'மானின் விழி' மருண்டு மருண்டு ராமனைப் பார்த்துக் கொண்டே தான் வருகிறது: ஆனால் விழிக்கு விழி எதிர் விழிக்கவில்லை. 'தேனின் மொழி' அத்'தேனின்' இதழிலிருந்து வெளிப்பட்டு, 'இன்பத் தேன் வந்துபாயுது' என்று ராமன் இன்புறக் 'காதினிலே' வந்து பாயவில்லை. இந்த நிலையில் ராமன் திரும்பிப் பார்க்கவேண்டுமே!—ஆம், மெய்ம் மறந்து இயற்கையின் அழகுச் செல்வத்தில் ஈடுபட்டிருக்கும் ராமன் திரும்பிப் பார்ப்பது எப்படி?

கண்—விருந்தும், செவி—விருந்தும்

நடன ஜதியில் ஆடிவரும் சுந்தரி போல் அல்லவா வருகிறாள் இம்மான் விழியாள்? 'தேனின் மொழி' கொண்டு பாடி வரவில்லை; எனினும் இந்த அம்மாள் நடக்கும்போதே ஒரு சங்கீதக் கச்சேரியும் நடக்கிறதாம்:

நூபுரமும், மேகலையும்,
　நூலும், அறல் ஓதிப்
பூமுரலும் வண்டும்இவை
　பூசலிடும் ஓசை,
தாமுரைசெய் கின்றதொரு
　தையல்வரும் என்னா:
கோமகனும் அத்திசை
　குறித்தனன் விழித்தான்.

[நூபுரம் — காலில் அணியும் பாதசரம். மேகலை — இடையில் அணியும் ஒட்டியாணம். நூல் —(இங்கே) கழுத்தில் அணியும் இரத்தின

ஆரங்கள். அறல் ஒரி — கருமணற் பரப்பை ஒத்த கூந்தல். பூமாலும் — பூக்களில் வந்து ரீங்காரம் செய்யும் ஓசை. உரை செய்கின்றது — கட்டியம் கூறி அறிவிக்கின்றது. ஒரு தையல் வரும் என்னா — வரப்போகிறாள் ஒரு பெண்மணி என்பதாக. கோமகன் — ராமன். குறித்தனன் விழித்தான் — குறித்து நோக்கினான்.]

கண்விருந்து, காதுக்கும் விருந்துதான். வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையைத் திருப்பி நேர்முகமாக்கிக் கொண்டு, கண் விருந்துக்குப் பீடிகையாகிறது செவி - விருந்து.

இசை விருந்து

காலிலே பாதசரம், இடையிலே மேகலைமணி, கழுத்திலே இரத்தின ஆரங்கள் — இவைகளோடு போட்டி போடுகிறது கூந்தலில் சூட்டிய பூக்களிலே வண்டுகளின் ரீங்காரம். இவையெல்லாம், இவளை அறியாமலே 'இசை யரங்கு' நடத்துகின்றன; நடத்தி, 'வருகிறாள் ஓர் அழகு - ராணி; வந்து கொண்டிருக்கிறாள்; இதோ வந்துவிட்டாள்!' என்று கட்டியங் கூறுகின்றன. இசை வந்த திசையைத் திரும்பிப் பார்க்கிறான் ராமன்.



வாயால் பாடிப் பாடி உள்ளத்தால் கேட்டுக் கேட்டு இன்புற வேண்டிய 'இசையரங்கு' இந்தப் பாட்டு. பாடப் பாடக் கேட்கக் கேட்க, அந்தப் பாதசர ஒலிகளையும் ஒட்டியாணச் சலங்கையோசைகளையும் இரத்தின வடங்களின் இன்னி

சைகளையும், சூடிய பூக்களோடு பறந்து வரும் வண்டுகளின் கீதத்தையும், நாமும் கேட்கிறோம் முதல் இரண்டு அடிகளின் சப்த ஜாலங்களிலே, தெவிட்டாத இசை விருந்தாக.

இசைப் பெருமிதம் அழகுப் பெருமிதத்திற்கு 'முன்னோடி'யாக வருகிறது. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே.' ஓசை வரும் திக்கு நோக்கியதும் தெண்டனிட வேண்டியதுதான், சரணாகதி செய்ய வேண்டியதுதான்! ஆனால் ராமனல்லவா இப்போது அந்தத் திக்கை நோக்குகிறான்?



கண்டான் கண்ணன்

சிறிதுநேரத்திற்கு முன் மனிதர் இருக்கும் அடையாளமே இல்லாத அந்தப் பிரதேசத்திலே.

விண்ணருள வந்த
தொரு
மெல்லமுதம்
என்ன

ஒரு தோற்றம் உண்டாகிறது. ராமன் காண்கிறான் கண்ணெதிரே:

விண்ணருள வந்த
தொரு
மெல்லமுதம்
என்ன,
வண்ணமுலை
கொண்(டு) இடை
வணங்கவரு
போழ்தத்(து),
எண்ணருளி
ஏழைமை
துடைத்தெழு
மெய்ஞ்ஞானக்
கண்ணருள்செய்
கண்ணன் இரு
கண்ணின்எதிர்
கண்டான்.

[போழ்தத்து-பொழுது, பொழுதில். எண் - எண்ணம்; (இங்கே) உணர்ச்சி. ஏழைமை — அறியாமையாகிய ஆண

வம். எழும் மெய்ஞ்ஞானக் கண் — புதிதாக விழித்தெழும் மெய்யறிவாகிய கண்.]

சிங்காரமும், பக்தியும்

'அழகின் பெருமிதத்தை இதற்கு மேல் எப்படித்தான் சொல்ல முடியும்?' என்று பிரமிக்கும்படியாகச் சிங்கார ரஸத்தில் தன்னை முழுக்க இழந்து பேசுகிறது கவிஞன் குரல், செய்யுளின் ஒரு பாதியிலே. அடுத்த பாதியிலோ, பக்தியின் எட்டாத உச்சநிலையைப் பேசுகிறது; அங்கே முழுக்க முழுக்கத் தன்னை இழந்து விடுகிறது.

முன் இரண்டடிகளைப் பாடப் பாடச் சிங்காரமும், பின் இரண்டடிகளைப் பாடப் பாடப் பக்திச் சுவையும் அதிசயமாய்ப் புலனாகும்படி அமைந்திருக்கும் இச்செய்யுளமைப்பிலே, சூர்ப்பணகையின் அற்புத ரூப சௌந்தரியத்தையும், ராமனுடைய தெய்விக ஞான சௌந்தரியத்தையும் ஒருங்கே எதிரெதிரே, அப்படியப்படியே காண்பது போலத் தோன்றுகிறது!

இவர் யாரோ?

'இந்த அழகுக்கு எல்லையும் உண்டோ?' என்று பிரமிக்கிறான் ராமன்:

பேருழைய நாகர்உல
 கில்,பிறிதின்,— வானில்,
பார்உழையில், இல்லதொரு
 மெல்லுருவு பாரா,
'ஆர்உழையள்? தங்கும்அழ —
 கிற்(கு)அவதி உண்டோ?
நேரிழையர் யாவர்இவர்
 நேர்?'என நினைந்தான்.

[பேர் உழைய — பேர் பெற்றிருக்கும். நாகர் உலகில் — நாக லோகத்திலே. பிறிதின் — (அதை ஒத்த) வேறு லோகத்தில். வானில் — வானலோகத்தில். பாருழையில் — பூலோகத்தில். இல்லதொரு — இல்லாததொரு. மெல்லுருவு — மென்மையான வடிவழகு. பாரா — பார்த்து. ஆர் உழையள் — எந்தப் பேர்பெற்ற குடும்பத்திற்கு உரியவளோ. தங்கும் அழகிற்கு அவதி உண்டோ — இந்த உருவில் தங்கியிருக்கும் அழகு வெள்ளத்திற்கு எல்லையும் உண்டோ. நேர் இழையர் யாவர் இவர் நேர் — பெண்களிலே இவருக்கு ஒப்பானவர் யார். என — என்று.]

'நாக கன்னிகையோ?...... தேவ கன்னிகையோ?' என்று ராமன் அந்த உருவத்தைப் பார்த்துச் சிறிது திகைத்து நிற்கிறான். பிறகு 'இவர் எந்தப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவரோ?' என்று எண்ணுகிறான்.

அழகுவெள்ளம் வரம்பு கடந்து பொங்க, அந்த வெள்ளத்திலே ஒரு சுழி போல், அந்த வெள்ளத்தைத் தோற்றுவிக்கும் ஊற்றுக் கண்போல், பெண்ணின் உருவம் திகழ்கிறது.

* * * *

இந்தக் காட்சியிலிருந்து எவ்வளவு அதிசயமாக ராமாயணக் கதை உருவெடுக்கப் போகிறது என்பதை நாமும் நினைத்துப் பார்ப்போம்.



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

242. கன்னி காமவல்லி

சூர்ப்பணகை ராமனருகில் வந்து நிற்கிறாள். வந்து நின்று அந்த முகத்தை நோக்குகிறாள். அவன் தன்னைப் பாராமல் இருக்கும்போதே அவனைப் பார்த்துக் கொண்டு வந்தவள் தான். இப்போது அவன் தன்னை நோக்கும் போது அவனை எதிர்ப்பட்டுத் தானும் எதிர் நோக்கு நோக்குவது சாத்தியமாக இல்லை. அப்படிச் செய்வது சிலாக்கியமாகவும் தோன்றவில்லை; உசிதமாகவும் தோன்ற வில்லை. சீதைகூட

அண்ணலும் நோக்கினான்,
அவளும் நோக்கினாள்

என்கிறபடி, அவனைப் போல் அப்படி நிமிர்ந்து நோக்காவிட்டாலும், ஆசை நாணத்தையும் வென்ற நிலையில் எதிர்நோக்கு நோக்கத் துணிந்தாள்.

நாணிக் கோணி...

சூர்ப்பணகையோ, ஆசையை நாணம் வென்றுவிட்டது என்று சொல்லக்கூடிய நிலையில், முகத்தை நோக்கியதும் கூசிக்குனிந்து அவன் அடிகளை நோக்கிக் கும்பிடு போடுகிறாள். ராமனுடைய அடிகளை நோக்கித் தொழுதுகொண்டே, ஒரு புறமாய் ஒதுங்கியும் ஒதுங்காமலும் நிற்கும் அந்த நிலையைப் பாருங்கள் :

அவ்வயின், அவ் ஆசைதன்
அகத்துடைய அன்னாள்,
செவ்விமுகம் முன்னி, அடி
செங்கையின் இறைஞ்சா,
வெவ்விய நெடுங்கண் அயில்
விசிஅயல் பாரா,
நவ்வியின் ஒதுங்கி, இறை
நாணி அயல் நின்றாள்.

[அவ்வயின் – அவ்விடத்திலே. அன்னாள் – அவள். செவ்வி முகம் முன்னி – அழகிய முகத்திற்கு முன்பு சென்று. செங்கை – சிவந்த கை.

இறைஞ்சா — கும்பிட்டு. வெவ்விய நெடுங்கண் அயில் — கொடிய நீண்ட கண்களாகிய வேல்கள். அயல் பாரா — பக்கப் பார்வையாகப் பார்த்துக் கொண்டு. நவ்வியின் ஒதுங்கி — மான்போல மருண்டு ஒரு புறமாக ஒதுங்கி. இறை நாணி — சிறிது நாணம் காட்டி. அயல் நின்றாள் — அருகில் நின்றாள்.]

'இவளை ஒப்பார் எவரும் இல்லை, இவ்வடிவழகி யாரோ?' என்று வியந்து நின்ற ராமன் முன்பு வந்து, சூர்ப்பணகை அவன் காலை நோக்கிக் கும்பிட்ட வண்ணம், நாணிக்கோணிப் பக்கப் பார்வையாகப் பார்த்துக் கொண்டு அருகே நிற்கிறாள். எனினும் அந்தக் கடைக் கண்களிலிருந்து கொடிய வேல்கள் இடையிடையே இரக்கமில்லாமல் வீசப்படுகின்றன! அரக்கியின் இந்தக் காதல் நாடகக் காட்சி எத்தகைய சொல்லோவியமாகப் பரிணமித்திருக்கிறது பாருங்கள்! தமிழ் நாட்டின் ஓவியமணிகள் எழுதி எழுதிப் பார்க்கவேண்டிய ஓவியங்களில் ஒன்று.

நல்வரவு

இதிலிருந்து ராமனுக்கும் சூர்ப்பணகைக்கும் சம்பாஷணை ஆரம்பமாகிறது. இனி ராமன் தானே பேச ஆரம்பிக்கவேண்டும், வரவேற்றுப் பேசவேண்டும்? அவன் தனக்கு நல்வரவு கூறவேண்டுமே, அந்த வார்த்தை தடுமாறித் தழுதழுத்து வரவேண்டுமே என்று துடித்துக் கொண்டிருக்கிறது சூர்ப்பணகையின் நெஞ்சு.

ராமனும் நல்வரவு கூறி உபசரிக்கிறான். ஆனால் அந்த வார்த்தை எவ்வளவு திடமாகவும் சாதுரியமாகவும் வந்து விழுகிறது! கோசல நாட்டுப் பண்பாடும் மரியாதையும் தொனிக்கும் இவ்வார்த்தையை நாமும் கேட்டு அனுபவிப்போம்.

'தீதில்வர வாகதிரு!
நின்வரவு, சேயோய்!
போதவுள(து) எம்முறையோர்
புண்ணியம்இ தன்றோ?
ஏதுபதி? ஏதுபெயர்?
யாவர்உற(வு)?' என்றான்
வேதமுதல்; பேதையவள்
தன்னிலை விரிப்பாள்.

[தீதில் வரவாக — தீங்கில்லாத வரவு ஆகுக. திரு — லட்சுமிபோன்றவளே. சேயோய் — (1) செந்நிறம் உடையவளே; (2) செம்மைக் குணம் உடையவளே. போத — நீ வந்து சேரும்படி. எம்முறை — எம்மிடத்தில். உளது — உள்ளது. ஓர் புண்ணியம் — ஓர் புண்ணியம்; ஒப்பற்ற புண்ணியம். பதி — ஊர். வேத முதல் — வேத முதல்வனான ராமன்; (இங்கே) வேதப்பொருளை உணர்ந்த முதல்வன். பேதையவள் — (1) இளமை கொண்டவள்; (2) அறிவில்லாத அவள்.]

ராமனுக்கும் சூர்ப்பணகைக்கும் நடக்கும் சம்பாஷணையை வேதமுதலானுக்கும் பேதைக்கும் இடையே நடக்கும் சம்பாஷணையாக ஆரம்பத்திலேயே கவிஞன் குறிப்பிடுகிறான். பேதை கபட நாடகம் ஆடுகிறாள். வேதமுதல், கள்ளங்கவடு இல்லாமல் உரையாடுகிறான். ஓர் உயர்ந்த ஸ்தம்பத்தின் உச்சியில் நின்று ஆடும் கழைக் கூத்தாடிபோல் அறிவின்



உச்சியிலிருந்து ஆடுவதாக எண்ணமும் உணர்ச்சியும் தான் ராவணேசுவரன் தங்கைக்கு. வேத முதல்வனோ ஒன்றும் அறியாதவன் போல் அவளைத் தோற்றத்தின்படி நல்லாளாக நிச்சயித்து நல்வரவு கொண்டாடி உபசரித்து, 'தங்கள் ஊர் எது? பேர் என்ன? உறவினர் யாவர்?' என்று வினவுகிறான்.



'உன் வரவு நல்வரவாகுக' என்பதைத் தான் 'தீதில் வரவாக திரு! நின் வரவு' என்கிறான் சிறந்தவர்களுக்கு நல்வரவு கூறும் மரபு இது. நல்வரவை அழுத்தமாக வெளியிடுவது தான் 'தீதில் வரவு.' எனினும் சூர்ப்பணகை வருகையால் தீமை பெருகி வரப் போகிறது என்பதை உணர்ந்திருக்கும் நமக்கு,

தீதில்வர வாக,திரு!
நின்வரவு சேயோய்!

என்ற வரவேர்புரையும் பொருள் பொதிந்ததாகத் தோன்றுகிறது. 'மகா

லட்சுமி போல் இருக்கிறாயே அம்மா! உன் செந்நிற மேனியுடன் உன் குணமும் செம்மையாக இருந்து, உன் வரவும் தீதில்லாத வரவாய் இருக்க வேணும்' என்ற ஏதோ ஒரு உட்குரல் ராமனுடைய உள் மனத்திலிருந்து பேசுவதுபோல் ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது நமக்கு.

என்ன கர்வம்!

ராமனுடைய கேள்விக்கு விடையாக வருகிறது சூர்ப்பணகையின் வாக்குப் பிரவாகம். மயிலாக ஆடி அசைந்து வந்தவள் குயிலாக இசைத்துக் கூவுகிறாள் தன் விடையை:

'பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்வி,முப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவ னான
செங்கையோன் தங்கை, திக்கின்
மாவெலாம் தொலைத்து வெள்ளி
மலையெடுத்(து) உலகம் மூன்றும்
காவலோன் பின்னை, காம
வல்லியாம் கன்னி யென்றாள்.

[பூவிலோன்—தாமரைப் பூவில் தோன்றிய பிரம்ம தேவன். முப்புரங்கள் செற்ற—திரிபுர தகனம் செய்த. சேவலோன்—சிவபெருமான். செங்கையோன்—சிவந்த கைகளுடைய குபேரன். திக்கின் மா—திக்கஜங்கள். தொலைத்து—வலியழித்து. உலகம் மூன்றும் காவலோன்—மூன்று உலகங்களுக்கும் சக்கிரவர்த்தியான ராவணன்.]

ராமன் கேட்ட மூன்று கேள்விகளில் 'யாவர் உறவு ?' என்ற மூன்றாவது கேள்விக்கு முதல் முதல் விடை சொல்லுகிறாள். அந்த விடையிலேயே தன் குலப் பெருமையையும், உடன் பிறந்தோர்களின் செல்வச் செருக்கையும் அறிவித்துத் தன்னை உயர்த்திக் காட்டுகிறாள்.

தான் பிராம்மண ஜாதி என்பதைத்தான் எவ்வளவு பிரமாதப் படுத்துகிறாள் எடுத்த எடுப்பிலே! 'நதி மூலம், ரிஷி மூலம் பாராதே!' என்று சொல்லுகிறார்களே, அத்தகைய கலப்புற்ற ரிஷி பரம்பரையில் வந்த பிராம்மணி அல்ல இவள்! 'பிரம்ம குலத்தின் மூலபுருஷனான ஸாக்ஷாத் பிரம்ம தேவனது கொள்ளுப் பேத்தி நான்!' என்கிறாள்.

ஜாதித் திமிருக்குப்பின் செல்வத் திமிர் வருகிறது, 'குபேர முதலாளியின் செல்வத் தங்கைதான்' என்று சொல்லும்போது. குபேரனை வெள்ளி மலையோடு பொன்மலைக்கும் உரியவனாகிய சிவபிரானின் தோழன் என்கிறாள். இந்தத் 'தோழர்—குபேர'னுடைய கைகள் உழைத்துச் சிவந்ததில்லை; பணத்தை எடுத்தெடுத்து எண்ணி எண்ணிச் சிவந்து போயின! ('செங்கையோன்')

அந்தச் செங்கையோனின் இந்தத் தங்கை தங்கள் வலிமைத் திமிரையும் வற்புறுத்தி, 'ராவணேசுவரனுக்கும் தங்கை நான்' என்கிறாள். திக்கெலாம் தொலைத்து வென்று, பரமேசுவரனின் வெள்ளிமலையையும் பெயர்த்தெடுத்த தோள் வலிமை வாய்ந்த ராவணேசுவரனின் பெருமையை,

மாவெலாம் தொலைத்து வெள்ளி
மலையெடுத்து

என்று கேட்பவர் நெஞ்சு திடுக்கிடப் பேசுகிறாள்.



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

243. பாஷையும் பரிபாஷையும்

'யாவர் உறவு?' என்ற ராமனுடைய கடைசிக் கேள்விக்கு முதல் முதல் விரிவாக விடை கூறியவள், 'எது பதி?' என்ற முதலாவது கேள்விக்குப் பதில் சொல்லவே இல்லை; அவசியமில்லை யென்றே விட்டு விடுகிறாள். 'எது பெயர்?' என்ற நடுவிலுள்ள கேள்விக்குக் 'காமவல்லியாம் கன்னி' என்று கடைசியாக விடை கூறி முடித்து விடுகிறாள். ராமன் இவள் பெயரை இவ்வளவு முக்கியமாய்க் கருதாவிட்டாலும், இவளுக்கு இது அதிமுக்கியமாய்க் காண்கிறது.

காதலின் மனோதத்துவம்

ராமனை உற்று நோக்கியதும் பெருங்குடியில் பிறந்தவனாகத் தெரிந்தது; பெருஞ் செல்வத்திலிருந்து ஆண்டியாகி விட்டதாகவும் தோன்றியது. 'புய வலிமை யுள்ளவன்; கல்விமான்' என்றும் ஊகிக்க முடிந்தது. அவனுக்கு மனைவியாக வேண்டுமென்றால் தகுதி வேண்டுமல்லவா? ஆகவே, பிரமன் பெயர் சொல்லிப் பிரமிக்கச் செய்கிறாள். குபேரன் பெயர் சொல்லி, மரவுரி கட்டிய அரசிளங்குமரனுக்கு வறுமைப் பயம் போக்குகிறாள். ராவணன் பெயர் சொல்லி அழப் பண்ணித் தன் பெயரால், ஆறுதலும் ஆதரவும், காட்டிலே சொர்க்கமும் அளிக்கப் பார்க்கிறாள்.

இவள் தான் எப்படியெல்லாம் வளைத்து வளைத்துப் பேசுகிறாள் பாருங்கள்! தன்னைப் பற்றிச் சிறப்பாக எண்ணிக் கொள்ள வேண்டுமே என்ற காதலின் மனோ தத்துவம் இது.

சொக்குப் பொடி

கடைசியாக மிஸிஸ் சூர்ப்பணகா வித்யுஜ்ஜிஹ்வா—ஸாக்ஷாத் பிரம்ம குலம் அல்லவா?—விதவை மணம் விரும்பாது மிஸ் காமவல்லி ஆகி விடுகிறாள்!

பெயரிலேயே ராமன் மோகித்துப் போக வேண்டு மென்று அதையே சொக்குப் பொடியாகத் தூவி விடுவதுபோல் வந்து விழுகிறது 'காமவல்லி யாம் கன்னி என்றான்' என்ற கவிதைப் பகுதி.

ஐய வினா

எனினும் ராமன் சொக்கிப் போக வில்லை. சிங்கார ரூபத்திற்கிசைந்த சிங்காரப் பெயரைக் கேட்டும் நிலைகுலைந்து போகவில்லை. அவனுள்ளத்தில் பளிச்சென்று ஐயம் தோன்றுகிறது. 'இன்னும் சிறிது விசாரிப்போம்' என்று நினைத்து,

'வெவ்வுரு அமைந்தோன் தங்கை
என்பது மெய்ம்மை ஆயின்,
இவ்வுரு இயந்த தன்மை
இயம்புதி இயல்பின்' என்றான்.

[வெவ்வுரு — பயங்கர உருவம். இயம்புதி — கூறுவாய். இயல்பின் — (இங்கே) உள்ளபடி.]

'லோகபயங்கரனை ராட்சஸ சக்கிரவர்த்தியின் தங்கை யென்று இவள் சொல்கிறது தான் ஒரு வேளை பொய்யாய் இருக்குமோ?' என்பது இப்போது ராமனது முதலாவது சந்தேகம். 'மிகப் பெரிய அந்தஸ்துள்ள வர்களின் உறவினர்களாய்ச் சிலர் நடிப்பது போல் இந்த அழகியும் ஒரு வேளை ' என்று உள்ளத்தில் ஓடத் தொடங்கிய அந்த ஐயத்தை ராமன் வெளியிட்டு முடிப்பதற்கு முன்பே உணர்ந்து கொண்டாளாம் சூர்ப்பணகா தேவி. உண்மையிலேயே ராவணேசுவரன் தங்கை யல்லவா? அந்தப் பத்துத் தலை—மூளையும் இந்த ஒரே தலைக்குள் செறிந்து கிடப்பது போலப் பேசுகிறாள்.

'சூட்சும மானஸ சாஸ்திரி'

'அப்படியா செய்தி? ராவணேசுவரன் தங்கையா நீ? உன்னைப் பார்த்தால், காமவல்லீ! அப்படி அரக்கி மாதிரி ஒன்றும் தெரியவில்லையே' என்று ராமன் சொல்லும் போதே, 'இந்த உரு வந்த விதம் எந்த விதம்?' என்று துள்ளி வந்த அந்தக் கேள்விக்குத்தான் எவ்வளவு இசைவாகப் பதில் சொல்லி விடுகிறாள் சூர்ப்பணகை:

தூயவன் பணியா முன்னம்,
சொல்லுவாள் சோர்வி லாள்,'அம்
மாயவல் அரக்க ரோடு
வாழ்வினை மதிக்க லாதேன்,
ஆய்வுறு மனத்தே னாகி
அறம்தலை நிற்ப தானேன்,
தீவினை தீய நோற்றுத்
தேவரிற் பெற்ற(து)' என்றாள்.

[தூயவன் — ராமன். பணியா முன்னம் — சொல்லி முடிப்பதற்கு முன்பே. சோர்விலாள் — உத்தரம் சொல்லத் தயங்காதவளாய். மதிக்கலாதேன் — மதியாதவளாய். ஆய்வுறு — ஆராய்ந்து அறியும் விவேகம் பொருந்திய. அறம் தலைநிற்பதானேன் — அறத்தை மேற்கொண்டு அவ்வழி நிற்பவளான நான். தீய — ஒழியும்படி. தேவரிற்பெற்றது — தேவர்களின் அருளால் பாக்கியமாகப் பெற்றது (இவ் வடிவம்).]

'தீயோர் கூட்டுறவு துறந்தேன், தீய வாழ்வு துறந்தேன், தீக்குணம் துறந்தேன், தீய எண்ணம் துறந்தேன். ஆராய்ச்சியறிவால் அறவொழுக்கம் மேற்கொண்டு தீவினை களைந்தேன். "அகமே புறம்" என்ற சூட்சும இயற்கை விதிக்கு இணங்க என் அகத்தின் அழகே இந்த உருவில் பிரதிபலிக்கிறது!' என்று ஒரு சூட்சும மானஸ சாஸ்திரி போல் பேசுகிறாள் சூர்ப்பணகை.

எனினும் ராமனுடைய தூய நல்லறிவு மயங்கி விடவில்லை. 'அம்மா! நீ உன் அந்தஸ்துக்குத் தகுந்த ஆடம்பர வைபவங்களோடு வந்திருக்க வேணுமே, அவ்விதமின்றி ஒரு துணையும் இல்லாமல் இங்கே தனியாக வந்த காரணம் என்ன?' என்று மீண்டும் ஒரு கேள்வி கேட்கிறான். பொய் சொல்வதை ஒரு கலையாகப் பயின்றிருந்த சூர்ப்பணகை, வக்கீலின் குறுக்குக் கேள்விகளுக்குச் சிறிதும் அஞ்சாது திடும் திடுமென்று உத்தரம் சொல்லி வரும் பொய்ச்சாட்சி போலப் பதில் சொல்லிக் கொண்டே வந்து, தனக்கு ஒரு காரியம் ஆகவேண்டி யிருக்கிறது என்று மெள்ளக் கூறுகிறாள். 'மாப்பிள்ளை கொஞ்சம் மந்தமாகத்தான் கிரகித்துக் கொள்கிறான். அந்த அழகும் இந்த அறிவும் மணந்து கொண்டால், பரஸ்பர லாபம் கொஞ்சமோ?' என்பது சூர்ப்பணகையின் மனநிலை.



'கொலைகாரனிடமிருந்து காப்பாற்று!'

'சொல்லு, கூடுமானல் செய்வேன்' என்று ராமன் சொன்னதும், சூர்ப்பணகையின் விடை:

'தாமுறு காமத் தன்மை
நாங்களே உரைப்ப தென்ப(து)
ஆமெனல் ஆவ தன்ருல்,
அருங்குல மகளிர்க் கம்மா!
ஏமுறும் உயிர்க்கு நோவேன்,
என்செய்கேன்? யாரும் இல்லேன்,
காமன்என்(று) ஒருவன் செய்யும்
வன்மையைக் காத்தி!' என்ருள்.

[தாமுறு — தாங்கள் அடைந்துள்ள. ஏமுறும் — கலங்கிப் போயிருக்கும். நோவேன் — வருந்துகிறேன். வன்மை — (இங்கே) கொடுமை. காத்தி — தடுத்து என்னைக் காப்பாற்றுவாயாக.]

ராமனுக்குத் தன் மேல் இரக்கமும் பிரியமும் உண்டாகும்படி எவ்வளவு சாமர்த்தியமாகத் தன் கருத்தை வெளியிடுகிருள்! காதலை வாய்விட்டு வெளியிடும் உரிமை நல்லிசை மெல்லியலார்க்கு இல்லையாம், 'வல்லியல் மறவர்'களான ஆண்களுக்கே உரியதென்கிருள். தன்னைப் போன்ற அருங்குலமகளிர்க்கு அது ஒருகாலும் இயலாது என்கிருள். அவர்கள் சொல்லித்தாளுக வேண்டும் என்று தீர்மானிக்கலாம்; ஆனுல் அது காரியத்தில் நிறைவேறுவதில்லையாம். இப்படிப் பீடிகை போட்டுப் பேசுகிறவள், 'அது ஆகாது' என்று சுருங்கச் சொல்லிவிடாமல், அந்தத் தர்மசங்கட நிலையை 'உரைப்பதென்பது ஆமெனல் ஆவதன்ருல்' என்று தயங்கித் தயங்கி நீட்டித் தாமதமாய்ப் பேசுகிருள்.

காதல் அணைகடந்த வெள்ளமாகி அடித்துக் கொண்டு போகும் போது வேறு என்ன செய்ய முடியும்? அந்த நிலையைக் கூட அன்பனிடம் வெளியிடலாகாதா? இக் கேள்விக்கு இவள் உள்ளம் 'ஆம்' என்று விடை கூறப் பார்க்கிறதாம். ஆனுல் பிரம்ம — குபேர — ராவண அருங்குல மகளல்லவா?

இப்போது சூர்ப்பணகையின் பிரசினை 'இருப்பதா, இறப்பதா?' என்ற ஹாம்லெட்-பிரசினை போல் ஆகி விட்டது. இந்தப் பிரசினைக்கு எதிரே எந்தக் கட்டுப்பாடுதான் நிற்க முடியும்?

'என் செய்வேன்? யாரும் இல்லேன்!' என்று ஏங்கும் குரலைக் கேளுங்கள். 'என் நிலையைத் தெரிவிக்க இசைந்த பாங்கியும் இல்லையே, என் செய்வேன்?' என்று அந்தப் பரிதாப நிலையை எவ்வளவு உருக்கமாக வெளியிடுகிருள்!

முடிவில், 'என் விஷயமாக ஒருத்தன் செய்யும் கொடுமையைத் தடுத்துக் காப்பாற்றுவாய்!' என்று அநாதைப் பெண் போல முறையிட்டுக் கொண்டு 'அந்த மாபாவி மன்மதன் தான்!' என்று முடிக்கிருள்.

உள்ளத்தின் பலகணி

எவ்வளவு சாதுரியமான பேச்சு! என்ன ரஸமான வாக்கு வன்மை! இந்தப் பேச்சைப் பூர்த்தி செய்கிறது அந்தக் கண்களின் பரிபாஷை. எப்பேர்ப்பட்ட கண்கள்!



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

244. காமவல்லி அதிர்ஷ்ட வல்லியா?

அவளுடைய வாய்ச் சொல்லுக்கும் ராமன் பதில் சொல்லவில்லை; கண்ணால் பேசிய பேச்சுக்கும், அத்தகைய பாஷையிலும் விடை கூறவில்லை. இவன் 'நல்லவளல்ல' என்ற எண்ணம் உள்ளத்தில் ஓடியது. அந்த உள்ளோட்டம் மௌனக் கடலில் மறைந்து கிடந்தது. அந்த மௌனத்தைக் கடந்து மனத்தை அப்படியே ஊடுருவிப் பார்க்க வேண்டுமென்பது சூர்ப்பணகையின் ஆசை.

'நான் என் இதயத்தைத் திறந்து காட்டி விட்டேனே! இவனுக்கு என்னிடம் ஆசை உண்டா, இல்லையா?' என்று அறியமாட்டாது துடிக்கிறாள். நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே உள்ளம் ஊஞ்சலாடுகிறது.

பேசலன் இருந்த வள்ளல்
　　உள்ளத்தின் பெற்றி ஓராள்,
பூசல்வண்(டு) அரற்றும் கூந்தல்—
　　பொய்ம்மகள், 'புகன்ற என்கண்
ஆசைகண்(டு) அருளிற் றுண்டோ?
　　அன்றெனல் உண்டோ?' என்றும்
ஊசலால் உலாவு கின்றாள்,
　　மீட்டும்ஓர் உரையைச் சொல்வாள்.

[பேசலன் இருந்த — பேசாமல் மௌனமாய் இருந்த. வள்ளல் — ராமன். பெற்றி — தன்மை. ஓராள் — அறியாதவளாய். பூசல் வண்டு அரற்றும் — வண்டுகள் ஒன்றோடொன்று மோதி நெருங்கி ஆரவாரிக்கும். புகன்ற என்கண் — உள்ளத்தை வெளியிட்டுச் சொன்ன என்னிடம். ஆசை கண்டு அருளிற்று உண்டோ—ஆசைகொண்டு அருளியது உண்டோ. அன்று எனல் உண்டோ — அல்ல என்று மறுத்து விடுவதுண்டோ. ஊசல் — ஊஞ்சல்.]

ஒரு தந்திரப் பேச்சு

இப்படி மனந் தடுமாறிய சூர்ப்பணகை மீளவும் தன் கருத்தை வேறு வகையாக — இன்னும் தந்திரமாக வெளியிடப் பார்க்கிறாள் :

'எழுதரு மேனி யாய்! ஈண்(டு)
எய்திய(து) அறிந்தி லாதேன்,
முழுதுணர் முனிவர் ஏவல்
செய்தொழில் முறையின் முற்றிப்,
பழுதரு பெண்மை யோடும்
இளமையும் பயனின்(று) ஏகப்,
பொழுதொடு நாளும் வாளா
கழிந்தன போலும்' என்றாள்.

[எழுதரு — சித்திரத்தில் எழுதுவதற்கும் அருமையான. ஈண்டு எய்தியது — இங்கே நீ வந்து சேர்ந்தது. முறையின் முற்றி — முறைப்படி முடியச் செய்து கொண்டிருந்ததால். பயனின்று ஏக — பயன் இல்லாமல் செல்ல. பொழுதொடு — ஒவ்வொரு சிறு பொழுதோடும். வாளா — வீணாய்.]

ராமன் முனிவர்களுக்கு வேண்டியவன் என்பதை ஊகித்துக்கொண்ட சூர்ப்பணகை, தன் காதற் செய்தியோடு, 'நானும் முனிவர்களுக்குப் பணி செய்கிறவள் தான்' என்ற ஒரு பொய்ச் செய்தியும் சேர்த்துச் சொல்லுகிறாள். முனிவர்பணிகூடக் காதலனைக் கண்டதும் பச்சாத்தாபத்தை உண்டாக்குகிறதாம். 'நீ இங்கே வந்திருப்பது தெரிந்தேனில்லை ; அங்கங்கே முனிவர்களுக்குக் குற்றேவல் முறைப்படி செய்து கொண்டிருந்தேன். ஐயோ! பழுதில்லாத என் பெண்மையும் இளமையும் பயனில்லாமல் போய்க் கொண்டிருக்கின்றனவே! எத்தனை நாளும் பொழுதும் இப்படி வீணாய்க் கழிந்து விட்டன!' என்று ஏங்கிப் பெருமூச்சு விடும் சூர்ப்பணகையைப் பாருங்கள். காதற் கதைகளிலும் காதல் நாடகங்களிலும், பேசும் படங்களிலும் வரும் கதாநாயகிகளுக்குப் பாடம் சொல்லக் கூடியவள் அல்லவா?

ராஜ குலம் தான்!

அரக்கியின் கபட நாடகம் இப்போது மிகத் தெளிவாகி விட்டது ராமனுக்கு. பரிகாசமாக, 'பார்ப்பனப் பெண்ணாகிய உன்னை க்ஷத்திரியனாகிய நான் மணந்து கொள்ளலாமா?' என்று வர்ணாசிரம தர்மம் பேசுகிறானும் ராமன். அவளோ பளிச்சென்று 'என் தாய் ராட்சஸ ராஜ குலம் தான்' என்று ஒப்புக் கொள்கிறாள். தூய பார்ப்பனியத்திலிருந்து இப்படி இறங்கிப் பேசும் சூர்ப்பணகைப் பிராட்டியை நோக்கி ராமன் இளநகை யரும்பி, 'நங்காய்! ராட்சஸ ஜாதியோடு கேவலம் மனுஷ்ய ஜாதி கலப்பு மணம் செய்து கொள்வது தர்மமா?' என்கிறான்.

சூர்ப்பணகையோ அதற்கும் சமாதானம் சொல்கிறாள். 'அடடா, ராவணன் தங்கையென்று கூறியதெல்லாம் தவறு' என்று இப்போது எண்ணியவளாய், 'நான் தான் முன்னமே சொல்லி விட்டேனே ; தேவரைப் பூசித்து அந்தப் பழிபடு பிறவியைப் போக்கிக் கொண்டேனே!' என்கிறாள்.

கன்னிகாதானமா, காந்தர்வமா ?

ராமனே ராவண பயத்தாலும் குபேர பயத்தாலும் வருந்தியவனைப் போல், 'அம்மா! உன் தமையன்மார்களில் ஒருவனே மூவுலக ஏகாதிபதியான ராவணன்; மற்றொருவனே உலகம் மூன்றுக்கும் ஒரு முதலாளியான குபேரன். அவர்கள் கன்னிகாதானம் செய்து கொடாமல் நான் எப்படியம்மா உன்னை மணம் செய்து கொள்வது? அந்த அண்ணன்மார்களை நினைத்தாலே அச்சமாய் இருக்கிறது!' என்று சொல்லுகிறான்.

சூர்ப்பணகையோ, கன்னிகாதானத்தைக் காட்டிலும் காந்தர்வம் என்ற காதல் மணமே சிறந்ததென்கிறாள். அத்தகைய மணத்திற்கு வேதத்திலும் ஆதாரம் உண்டென்கிறாள்:

காந்தர்ப்பம் என்ப(து) உண்டால்;
காதலிற் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும்
மறைகளே வகுத்த கூட்டம்!

[காந்தர்ப்பம் — காந்தர்வம். மாந்தர் — இங்கே ஆடவர்.]



பச்சைப் பொய்யும், பரிகாசமும்

காதல் மணம் நிறைவேறி விட்டால், அண்ணன்

மாருக்கும் சம்மதமாகி விடுமாம். அவர்கள் முனிவர்களோடு தங்களுக்குள்ள பகைமையையும் மறந்து விடுவார்களாம். ராமனோடு சிநேகமும் செய்து கொள்வார்களாம். எப்பேர்ப்பட்ட ஆதரவு, தனியனாகிய ராமனுக்கு! பிறகு அவர்கள் அதிகாரத்தாலும் செல்வத்தாலும் தாங்கள் அடக்கியாளும் இராஜ்யங்களையும் தங்கை மேலுள்ள பிரியத்தினால் மாப்பிள்ளையையே ஆளச் செய்வார்களாம்; ஆளச் செய்து இந்த மாப்பிள்ளை — ராஜாவுக்கு அடங்கியும் நிற்பார்களாம். ராமன் பரிகசிக்கிறான் என்பது தெரியாமலே தான் சூர்ப்பணகை பேசுகிறாள்.

அரக்கர் தன்னோடு உறவாடுவதற்கும், இழந்த கோசல ராஜ்யத்திற்குப் பதில் ராவண ராஜ்யமும் குபேர ராஜ்யமும் தனக்குக் கிடைப்பதற்கும், தவசிக் கோலம் போய் மணக்கோலம் சித்திப்பதற்கும் ஒரே உபாயம் காட்டிய சூர்ப்பணகையை நோக்கி ராமன் மறுபடியும் பரிகாசமாய்ப் பேசுகிறான்:

'நிருதர்தம் அருளும் பெற்றேன்;
நின்னலம் பெற்றேன்; நின்னோ(டு)
ஒருவருஞ் செல்வத்(து) யாண்டும்
உறையவும் பெற்றேன்; ஒன்றோ
திருநிகர் திருந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த(து)?' என்று,
வரிசிலை வடித்த தோளான்
வாள்எயி(று) இலங்க நக்கான்.

[நிருதர் — அரக்கர். நின்னலம் — உன் அழகு. ஒருவருஞ் செல்வத்து — நீங்குதல் இல்லாத செல்வ வாழ்க்கையில். யாண்டும் — எந்நாளும். ஒன்றோ — ஒருவகையோ. பயந்தது — பலித்தது. என்று — என்று சொல்லி. வரிசிலை — கட்டமைந்த வில். வாள் — ஒளி. எயிறு — பற்கள். நக்கான் — சிரித்தான்.]

'அயோத்தியை விட்டு வந்ததுதான் எவ்வளவு அதிர்ஷ்டமாகி விட்டது! உன் காதலாலும் அரக்கர் அருளாலும் பெருஞ் செல்வவாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய பெரும் பெரும் பாக்கியம் கிடைக்கப் போகிறதே!' என்று ராமன் சிரிக்கிறானும், பல் இலங்கத் தோள் குலுங்க. இச் சிரிப்பில் எவ்வளவு பரிகாசமும் பழைய நினைவுகளும் கலந்து வெளிப்படுகின்றன!

இச் சம்பாஷணை இப்படி நடந்து கொண்டிருக்கும் போதே பளிச் சென்று ஒரு திவ்ய காந்தி உதயமாகிறது. ஆச்சரியத்தோடு நோக்குகிறாள் அரக்கி.



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

245. பாழ்பட்ட நெஞ்சும் பண்பட்டதா?

'உன்னை மணந்து, அரக்கர் அருளும் பெற்று நீண்ட பெருஞ் செல்வவாழ்வு வாழப்போகிறேன்: என் முன்னைய தவம் எப்படிப் பலித்து விட்டது!' என்று ராமன் கூறி நகை செய்த அதே சமயத்தில், சீதை பர்ணசாலையிலிருந்து ராமன் இருந்த இடத்திற்கு வந்தாள். இந்த வருகையும், சூர்ப்பணகை சீதையைப் பார்ப்பதும், பின்விளைவும் அதிமுக்கிய இதிகாசப் பகுதியாகையால், கதையை நாடகப் போக்கிலே நடத்துவதில் நிகரற்ற கவிஞன், இக்கட்டத்தை வாசகர்கள் மறக்க முடியாதபடி சித்திரித்துக் காட்டுகிறான்.

கண்ணொளியும் கண்மணியும்

உலகங்களுக் கெல்லாம் கண்ணொளி ராமன். இக் கண்ணொளியின் அருகில் வருகிறாளாம் கண்மணியாகிய பெண்மையரசு, 'தேவர் தவப்பயனாக மண்ணிலே வாராதுபோல வந்த மாமணி,' நடையாடும் பூங்கொடிபோல் வருகிறாள். இது கவிஞன் கூற்று; மந்திரக் கவிதையாகி, சுற்றிலும் செடி கொடி மரங்கள் தழைத்து மலர்ந்து பரிமளிக்கும் பர்ணசாலையிலிருந்து பெண்ணரசி வரும் அந்த அழகை அப்படியே ஸாக்ஷாத்கரிக்கச் செய்து விடுகிறது:

விண்ணிடை, இம்பர், நாகர்,
    விரிஞ்சனே முதலோர்க் கெல்லாம்
கண்ணிடை ஒளியின் பாங்கர்,
    கடிகமழ் சாலை நின்றும்
பெண்ணிடை அரசி, தேவர்
    பெற்றநல் வரத்தால் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த
    வஞ்சியே போல்வாள் வந்தாள்.

[விண்ணிடை — விண்ணுலகத்திலும். இம்பர் — இவ்வுலகத்திலும். நாகர் — கீழ் உலகத்திலும். விரிஞ்சனே முதலோர்க்கெல்லாம் — பிரம்மா முதலிய எல்லோர்க்கும். கண்ணிடை ஒளி — கண்ணொளி. பாங்கர் — அரு

இல். கடி — வாசனை. சாலை — பர்ணசாலை. மணி — இரத்தினம். வஞ்சி — வஞ்சிக் கொடி.]

கண்டதும் காணாததும்

சூர்ப்பணகை அந்த ஜோதியை ஆச்சரியமாகக் கண்டாள். முதன் முதல் கண் கூசும்படியாகச் சுடரும் ஒளி வெள்ளம்: இப்பொழுது வெள்ளத்திலே ஒரு சுழிபோல் அந்தச் சுடர்ச்சோதியில் ஓர் உருவம் தெரிகிறது. 'ஆஹா! இப்பேர்ப்பட்ட சௌந்தரியச் சுடர் இம் மண்ணுலகத்திற்குச் சொந்தமா யிருக்க முடியுமா? வானுலகத்திலிருந்து தான் நழுவி யிருக்க வேணும்' இது சூர்ப்பணகை கண்ட சீதை.

விண்ணையும் மண்ணையும் வாழ்விக்க வந்த ஜோதி, விண்ணையும் மண்ணையும் ஒருங்கே போர்த்துப் பரவிய ராட்சஸக் காட்டைச் சுட்டெரிக்கப் போகிறது — இது சூர்ப்பணகை காணாத சீதை!

இத்தகைய சீதையின் சித்திரத்திற்குக் கவிஞன் சூர்ப்பணகையைப் 'பகைப் புல'னாகப் பயன்படுத்திக் கொள்கிறான். அரக்கியின் செயற்கை யழகும் வஞ்ச வடிவமும் காமாந்தகாரமும், சீதையின் மெய்ம்மை கமழும் ரூப சம்பத்தையும், கள்ளம் அறியாத குண சௌந்தரியத்தையும் எவ்வளவு அற்புதமாக எடுத்துக் காட்டுகின்றன!

ஊன்சுட உணங்கு பேழ்வாய்
உணர்விலி, உருவம் நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம்
வந்திடை வயங்கல் நோக்கி,
மீன்சுடர் விண்ணும் மண்ணும்
விரிந்தபோர் அரக்கர் என்னும்
கான்சுட மூளைந்த கற்பின்
கனலியைக் கண்ணிற் கண்டாள்.

[ஊன்சுட — ஊனுள்ள பிராணிகளுக்கெல்லாம் சுடுகாடு போலிருக்க. உணங்கு — பதைக்கிற. பேழ் வாய் — திறந்த வாய். உணர்வு இலி — அறிவில்லாதவளான சூர்ப்பணகை. நாறும் — தோன்றும். வந்து இடை வயங்கல் நோக்கி — வந்து இடையிலே விளங்குவதை நோக்கி. மீன் — நட்சத்திரம். சுடர் விண்ணும் — சுடர்கின்ற ஆகாயமும். கான் — காடு. கனலி — கனலாக இருக்கிறவள்.]

கம்பனுடைய கவிதைச் சிற்பத்தில் இச் செய்யுள்மணியின் சோபையையும் 'வான் சுடர்ச் சோதி வெள்ளம்' என்றுதான் குறிப்பிட வேண்டும். தன்னையும் கடந்து வென்ற மேதா விலாசம் இது.


திருமகளும் வருவாளா?

சீதையைப் பார்த்த சூர்ப்பணகைக்கு ஒரே திகைப்பும் பிரமிப்பும்தான்.

'மருஒன்று கூந்த லாளை
வனத்(து)இவன் கொண்டு வாரான்;
உருஇங்(கு)இ(து) உடைய ராக
மற்றையோர் யாரும் இல்லை;
அரவிந்த மலருள் நீங்கி
அடியிணை படியில் தோயத்
திருஇங்கு வருவாள் கொல்லோ?'
என்(று)அகம் திகைத்து நின்றாள்.







[மரு ஒன்று—பரிமளம் பொருந்திய. கூந்த லாளை — (இங்கே) மனைவியை. அரவிந்தம் — தாமரை. படியில் — பூமியில். திரு—மகாலட்சுமி.]

'இக் கடுமையான காட்டுக்குத் தன் அருமையான மனையாளை இந்த ராஜகுமாரன் அழைத்துக் கொண்டு வந்திருப்பானா? இல்லை, இல்லை, துணிந்து அழைத்து வந்திருக்க மாட்டான். வனவாசிகளிலோ இந்த வடிவழகிற்கு எங்கே போவது? நான் தேடித் துருவிப் பார்த்திராத வனப் பிரதேசமும் இருக்க முடியுமோ? என்ன அதிசயம்! செந்தாமரைப் பூவில் செம்மாந்து வீற்றிருக்கும் லட்சுமி தேவியே தன் இயற்கைப் பொற் சிங்காசனம் துறந்து கால்நிலம் தோய நடந்து வந்தாளோ?' என்றெல்லாம் எண்ணமிடுகிறாள் சூர்ப்பணகை.

அழகிற்கு எல்லை இல்லை!

இப்படியெல்லாம் உள்ளம் திகைக்க, கண்கள் அந்த அழகை நோக்கிய வண்ணம் அப்

படியே நெடுநேரம் அனுபவிக்கின்றன. எப்போதும் சலித்துக் கொண்டே யிருக்கும் சூர்ப்பணகையின் பாழான நெஞ்சமும் இப்போது பண்புற்று நிற்கிறதாம், தூய பேரழகின் சந்நிதியிலே.

இந்நிலையில் இவள் உள்ளத்தில் ஓடும் எண்ணங்களை மீண்டும் நோக்கு வோம் :

பண்புற நெடிது நோக்கிப்,
'படைக்குநர் சிறுமை யல்லால்,
எண்பிறங்(கு) அழகிற்(கு) எல்லை
இல்லையாம் என்ன நின்றாள்;
கண்பிற பொருளில் செல்லா,
கருத்தெனின் அஃதே; கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால்,
என்படும் பிறருக்(கு)?' என்றாள்.

[பண்பு உற — பண்பு பொருந்தும்படி. படைக்குநர் — சிருஷ்டிப் பவர். சிறுமை — திறமைக் குறைவு. எண் பிறங்கு — எண்ணத்திலே பிரகா சிக்கும். கண் — கண்கள்.]

அழகுப் பொருள்களான சிலைகளோ, சித்திரங்களோ, கவிகளோ எவையும் பூர்ண அழகு வாய்ந்தனவாகக் காணப்படாததற்குக் காரணம், அவற்றைப் படைக்கிறவர்களின் திறமைக் குறைவு தான்; உண்மையில் அழகுக்குக் குறைவில்லை; ஏன், எல்லையே இல்லை! — என்ற இந்தத் தத் துவத்தைச் சூர்ப்பணகை சீதை பால் கண்டு கொள்கிறாளாம்.

'என்படும் பிறருக்கு?'


'சீதை யழகு பார்க்கப் பார்க்க வளர்ந்து கொண்டே யிருக்கிறது; எவ்வளவு நேரம் பார்த்தாலும் எல்லைகாண முடியாமல் இருக்கிறது!' என்று எண்ணி நின்றவள், 'பெண்ணாய்ப் பிறந்த எனக்கே இப்படி யென்றால், பிறர் கண்ணும் மனமும் என்ன பாடு படுமோ?' என்று பிரமிக்கிறாள். இந்த அரக்கி, 'ஆடவர்க்கு எப்படி யிருக்குமோ?' என்று சொல்லிவிடாமல் 'என்படும் பிறருக்கு?' என்று நாசூக்காகச் சொல்வது, சீதையின் தூய அழகை நெடிது நோக்கி இவள் கருத்தும் பண்புற்று விட்டது!' என்பதை மெய்ப்பிக்கிறது.

பெண்பிறந் தேனுக் கென்றால்,
என்படும் பிறருக் கென்றாள்.

என்ற செய்யுளடியில் ஆண்மக்களைப் 'பிறர்' என்று குறித்து மோனை நிரம் பிய கவி சாதுரியம் இச் செய்யுளை ஒரு மகுடமணிபோல் அணிசெய்கிறது.

* * * *

இக்காவியப் பகுதியை ஒட்டிப் பேசும்போது, தமிழில் மில்ட்டனின் சிறந்த பகுதியை மொழி பெயர்த்திருக்கும் ஆசிரியர் திரு. வெ. ப. சுப்பிர மணிய முதலியார், 'அவரை (கம்பரை) ஆங்கில மகாகவியாகிய மில்ட்ட னும், நாடக மகாகவியாகிய ஷேக்ஸ்பியரும் தனித்தனி நிகர்க்கார், ஒன்று சேர்ந்து நிகர்வார்' என்று கூறும் 'ஆங்கில திராவிட வாணர்' களான ரஸிகர்களின் அபிப்பிராயத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.



246. அந்த அரக்கி சீதை!

நோக்க நோக்கத் தெவிட்டாத காட்சி யின்பத்தின் கரையைக் கண்டு பிடிக்க முடியவில்லை. 'வரம்பில்லாத அழகுச் செல்வத்தை வைத்துக் கொண்டுதானே என்னைப் போன்றவர்கள் விஷயத்தில் வாரி வழங்க இஷ்டப் படாமல் பரம லோபியாக நடந்து கொண்டிருக்கிறானே சிருஷ்டிகர்த்தா, அந்தச் சிறுமையை என்னென்பது?' என்ற எண்ணமும் சூர்ப்பணகை உள்ளத்தில் இடம் பெறவில்லையென்று சொல்ல முடியாது. இப்படிப் பொறாமையின் வித்தும் விதைக்கப்பட்டு, சிறிது பண்பட்டிருந்த நெஞ்சைப் பழையபடி பாழாக்கி விடுகிறது.

காமி ரஸிகையாகிறாள்!

எனினும் இதற்கு முன்பே, சீதையின் தூய அழகால் ஒரு படி உயர்ந்த நிலையில் வீர செளந்தரிய மூர்த்தியான ராமனையும் அழகிற் சிறந்த சீதா தேவியையும் ஒருசேர நோக்கி, 'ஆடவர்கள் பெண்கள் என்ற இரு திறத்தார்க்கும் செய்து வைத்திருக்கும் அழகின் எல்லையே இவ் இருவரும்' என்று தனக்குத் தானே ஒப்புக்கொள்கிறாள்:

பொருதிறத் தானை நோக்கிப்,
  பூவையை நோக்கி நின்றாள்,
'கருதமற்(று) இனிவே றில்லை,
  கமலத்துக் கடவுள் தானே
ஒருதிறத்(து) உணர நோக்கி,
  உருவினுக்(கு) உலக மூன்றின்
இருதிறத் தார்க்கும் செய்த
  வரம்(பு) இவர் இருவர்' என்றாள்.

[பொரு திறத்தானை - போர் செய்யும் திறமையுள்ள ராமனை; வீர செளந்தரிய மூர்த்தியை. பூவை - கிளி போன்ற சீதை. கமலத்துக் கடவுள் - தாமரைமலரில் தோன்றிய பிரம்மதேவன். ஒரு திறத்து - ஒருங்கே முழுவதும். இரு திறத்தார் - (ஆடவர் மகளிர் என்ற) இரு வகைப் பட்டோர். வரம்பு - முடிவெல்லை.]

சீதையின் அழகை முதல் முதல் பார்த்த பிரமிப்பிலே ராமனையும் மறந்துவிட்டாள். அவன் - நினைவு திரும்பிவர அவளை விட்டு அவனைப் பார்த்தாள். முன்போல் காமக் கருத்துடன் அல்ல; அழகை அழகின் பொருட்டே பார்ப்பதுபோல் பார்த்து, அதே நோக்குடன் மறுபடியும் சீதையை நோக்குகிறாள். இப்படி நோக்கி நின்றதும், 'இதுவரையில் நாம் அறிந்திராத, ஈடும் எடுப்பும் இல்லாத, ஆணழகு பெண்ணழகு இரண்டையும் ஒருசேர நோக்குகிறோம்!' என்னும் உணர்ச்சி ஏற்படுகிறது. இந்நிலையில் இந்த இருவகை அழகையும் ஆசைதீர அனுபவிக்கும் — காமியாக அல்ல — ரஸிகையாக நின்று சூர்ப்பணகை, 'ஆணழகு அவன் தான், பெண்ணழகு இவள் தான்!' என்கிறாள்.

'படைப்புக் கடவுள் தான் படைக்கத் தொடங்கிய காலந்தொட்டுப் படைத்துப் படைத்துப் பிறகு உடைத்து உடைத்துப் பழகிப் பழகி முதிர்ந்த அனுபவ சிகரமான ஆற்றலோடு ஆலோசனை செய்து செய்து, ஆண், பெண் என்ற இரு பாலாருக்கும் வடிவழகின் முடிவெல்லையாகப் படைத்துவிட்டிருக்கிறான் இவ்விருவரையும்' என்று முடிவுகட்டுகிறாள் சூர்ப்பணகை.

தனித் தனியாகச் சீதையையும் ராமனையும் மாறி மாறிப் பார்த்தாள், ஒரு சேரப் பார்த்தாள்; 'இந்த நம்பியும் நங்கையும் சமஜோடி, சரிக்குச் சமானராக இணைந்து இசைந்து காணும் இரட்டையர்' என்று வியக்கிறாள், தன்னை மறந்து, இருவர் அழகிலும் ஈடுபட்டு.

பொறாமை, வெறுப்பு, கோபம், பகைமை

பிறகு தன் நினைவு வருகிறது. அதையடுத்து ராமனைத் தான் காதலித்த முன் நினைவும் வருகிறது. உடனே 'இவள் இடையூறல்லவா?' என்ற கொடிய பின் நினைவாக முளைத்தெழுகிறது பொறாமை. 'இவளும் என்னைப்போல் ராமன்பால் மோகங்கொண்டு இடையே வந்தவள், எனக்கு எதிரிடையாக வந்தவள்!' என்று வெறுக்கிறாள் சீதையை. பொறாமை தளிர்த்து இலைவீசி வெறுப்பாக அரும்பிவிடுகிறது:

'பொன்னைப்போல் ஒளிரும் மேனிப்
பூவைப்பூ வண்ணத் தான், இம்
மின்னைப்போல் இடையா ளோடு
மேவுமெய் உடையன் அல்லன்;
தன்னைப்போல் தகையோர் இல்லாத்
தளிரைப்போல் அடியி னாளும்,
என்னைப்போல் இடையே வந்நாள்,
இகழ்விப்பேன் இவளை!' என்னா.

[பூவைப் பூவண்ணத்தான்—ஒருவகை நீலமலர் போன்ற வண்ணமுள்ள ராமன். மேவு மெய் உடையன் அல்லன்—கணவன் அல்லன். தகை — (இங்கே) அழகு. இகழ்விப்பேன் — (இவனைக் கொண்டே) இவளை இகழச் செய்வேன். என்னா — என்று எண்ணி.]

எப்படியாவது சீதையிடம் ராமனுக்கு வெறுப்பையுண்டாக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறாள் சூர்ப்பணகை. அதற்காக இவள் யுக்தி வேலை செய்வதைப் பாருங்கள்:

‘வரும்இவள் மாயம் வல்லள்;
வஞ்சனை அரக்கி; நெஞ்சம்
தெரிவிலள்; தேறும் தன்மை,
சீரியோய்! செயலிற் றன்றால்;
உருவமும் மெய்ய தன்றால்;
ஊன்நுகர் வாழ்க்கை யாளை
வெருவினென்; எய்தி டாமல்
விலக்குதி, வீர!’ என்றாள்.

[தெரிவிலள் — தெரிய முடியாதவள். தேறும் தன்மை — (இவளைக் குறித்துத்) தெளிந்து உரைக்கும் தன்மை. செயலிற்று அன்று — செய்யத் தக்கதன்று. ஊன் நுகர் — ஊன் உண்ணும்; மாமிசம் சாப்பிடும். வெருவினென் — பயந்தேன். எய்திடாமல் — (அருகே) வரவொட்டாமல். விலக்குதி — தடுத்துவிடுவாய்.]

‘இவள் மாயையில் வல்லவள், வஞ்சனை அரக்கி; இந்த வடிவம் உண்மையானதன்று. அன்பனே! இந்த நரமாமிச பட்சிணியைக் கண்டு நான் பயப்படுகிறேன். அருகில் வர வொட்டாமல் துரத்திவிட வேணும்’ என்று கொஞ்சித் தன்னுடைய தன்மைகளைச் சீதை மேல் ஏற்றிக் கூறும் அரக்கியின் மனநிலையைப் பாருங்கள். ‘குதிருக்குள் அப்பா இல்லை!’ என்ற கதை தானே?



சூர்ப்பணகையின் வேஷ ரகசியங்களெல்லாம் இப்படி வெட்டவெளிச்சமாக, ராமன் பரிகாசமாய், ‘நங்காய்! உன் அறிவு எவ்வளவு நன்றாக விளங்குகிறது! இந்தக்கொடிய மாயக்கள்ளியின் வஞ்சனையை வெட்டவெளிச்சமாக்கி விட்டதே! உன்னை

வஞ்சிக்கக் கூடியவர்களும் உண்டோ? இந்தக் கள்ள வல்லரக்கியை நன்றாகப் பார்' என்று சீதையைச் சுட்டிக் காட்டி நகைக்கிறான்:

ஒள்ளி(து) உன் உணர்வு, 'மின்னே!
உன்னை யார் ஒளிக்கும் ஈட்டார்?
தெள்ளிய நலத்தி னால்உன்
சிந்தனை தெரிந்த தம்மா!
கள்ளவல் அரக்கி போலாம்
இவளை நீ காண்டி!' என்னு
வெள்ளிய முறுவல் முத்தம்
வெளிப்பட வீரன் நக்கான்.

[ஒள்ளிது உன்உணர்வு—உன் புத்திசாலித்தனம் மிகவும் நேர்த்தியாயிருக்கிறது. ஈட்டார்—வல்லமை யுள்ளவர். தெள்ளிய—தெளிந்த. காண்டி—காண்பாய். என்னு—என்று சொல்லி. வெள்ளிய முறுவல் முத்தம்—வெள்ளை வெளேரென்றிருக்கும் பற்களாகிய முத்துக்கள். நக்கான்—சிரித்தான்.]

மாயவேடம் பூண்டுவந்திருக்கும் அரக்கியாகிய சூர்ப்பணகை சீதையை அரக்கி யென்றதும், ராமனுக்குச் சிரிப்பு வராமல் இருக்குமா? அதே சமயம் ராமனுக்கு அருகில் வருகிறாள் சீதை. சூர்ப்பணகைக்குப் பொறாமை பொங்கிவடுகிறது, எரிமலையில் நெருப்பாறு பொங்கி வருவதுபோலே:

'நீயிடை வந்த(து) என்னை?
நிருதர்தம் பாவை!' என்னுக்
காயெரி அனைய கள்ள
உள்ளத்தாள் கதித்த லோடும்—

[என்னை—என்ன. நிருதர்தம் பாவை—ராட்சஸியே. காய்எரி அனைய—காய்ந்து எரிந்து வெளிபடும் நெருப்பை ஒத்த. கதித்தலோடும்—அதட்டிய வுடனே.]

சீதாராம தம்பதிகள்

சூர்ப்பணகை அதட்டியதும், சீதை என் செய்வாள்? நடுங்கித் தள்ளாடி ஓடி வந்து ராமனைத் தழுவிக் கொள்கிறாள்.

அஞ்சிய அன்னம் அன்னாள்,
மின்இடை அலச ஓடிப்
பஞ்சின்மெல் அடிகள் நோவப்
பதைத்தனள், பருவக் கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும்
பவளத்தின் வல்லி யென்னக்
குஞ்சரம் அனைய வீரன்
குவவுத்தோள் தழுவிக் கொண்டாள்,

[மின்இடை அலச—மின்னல் போன்ற இடை துவளும்படி, அலையும்படி. பஞ்சின்—பஞ்சு போன்ற. பருவக்கால பஞ்சு—பருவக் காலத்து நீலமேகம். வயங்கி—விளங்கி. பவளத்தின் வல்லி—பவளக்கொடி. குஞ்சரம்—யானை. குவவுத்தோள்—திரண்ட தோள்கள்.]

முதல் முதல் சீதையின் கள்ளங் கவடற்ற உள்ளத்திலே அச்சம் தோன்றுவதும், மின்னல் அலை பாய்வதுபோல் ஓடி வரும்போதே அச்சம் நடுக்கமாவதும், ராமன் தோளைக் கட்டிக் கொண்டதும் அச்சமும் நடுக்கமும் போய் அமைதி ஏற்படுவதும், இப்பாட்டின் வாயிலாக எப்படி வந்து விடுகின்றன நம் இதய அரங்கிலே! பாடிப் பாருங்கள்.



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

247. ஐயோ, போச்சே!

அரக்கி சொன்னது ஒன்றும் சீதைக்குச் சரியாகப் புரியவில்லை. சீதையைக் கள்ள அரக்கி யென்றும் நரமாமிச பட்சணி யென்றும் சொல்லித் தான் முதலில் பயந்து விட்டது போல் பாசாங்கு செய்த காமவல்லி, திடீரென்று குரோதவல்லியாகி அதட்டியதும், இடி இடிக்கக் குழந்தை நடுங்கித் தாயைக் கட்டிக் கொள்வது போல் சீதையும் மெய் நடுங்கி ராமனைத் தழுவிக் கொண்டாள். பொறுமை தூண்டிய கோபமும், வெறுப்பிலே விளைந்த பகைமையும், காமவல்லியின் வேட ரகசியத்தைச் சீதைக்கும் — அவள் கவனித்திருந்தால் — ஒருவாறு காட்டியிருக்கக் கூடும். ஆனால் இந்தக் கொடுமாயக் கள்ளியை உற்று நோக்க அவகாசம் தான் ஏது?

•

எச்சரிக்கை

சீதையை அரக்கி அரக்கி யென்று சொன்னது ராமனுக்கு முதலில் வேடிக்கையாகத் தோன்றியது. ஆனால் சீதையை அவள் பயமுறுத்தியதும், 'ராட்சஸ சுபாவமுள்ளவர்களோடு — ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி, — விளையாட்டும் வினைதான்!' என்று எண்ணுகிறான் ராமன்.

'வினைதான்' எண்ணியதும் தம்பி நினைவு வருகிறது. உடனே 'எனக்குத் தம்பி ஒருவன் இருக்கிறான், அம்மா! அவனுக்குத் தெரிந்தால் கோபித்துக் கொள்வான். பெண்மணியே! இந்த இடத்தை விட்டு இப்போதே ஓடிப்போ' என்று எச்சரிக்கிறான்:

'உளைவன இயற்றேல்; ஒல்லை
உன்நிலை உணரு மாயின்
இளையவன் முனியும், நங்காய்!
ஏகுதி விரைவின்' என்றான்.

[உளைவன – மன உளைச்சல் தரும்படியான காரியங்கள். இயற்றேல் – செய்யாதே. ஒல்லை – விரைவில். முனியும் – கோபிப்பான். ஏகுதி – (அப்பால்) போய் விடு.]

ராம ராஜ்யப் பண்பாடு

இந்த எச்சரிக்கையிலும் ராமனுடைய பண்பட்ட உள்ளம் பிரதிபலிக்கிறது. வந்திருக்கிறவள் பொல்லாத அரக்கி என்று தெரிந்து விட்டது. காட்டிலே தன் அருமைச் சீதையைப் பயமுறுத்துகிறாள். பக்கத்திலே அம்பும் வில்லும் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலும் ராமன், இந்த அரக்கியிடத்திலும் இரக்கம் கொண்டவனாய், இவள் நிலைக்குப் பரிதாபம் கொண்டவனாய், 'வம்பு செய்து விடாதே ; தம்பி கோபிப்பான்' — என்று எவ்வளவு இதமாகப் பதமாகப் புத்தி சொல்லிப் பார்க்கிறான் ! செய்யுள் — அடிகளைப் பாடப் பாட ராமனுடைய இதயப் பண்பு இனிது புலனாகும்.

மேலும் ராமன், 'எங்களுக்கும் உன்னுடைய துஷ்ட ராட்சஸ இனத்திற்கும் யாதொரு தொடர்பும் இருக்க முடியாது' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் சூர்ப்பணகை அந்த இடத்தை விட்டுப் போவதாக இல்லை. 'பிடிவாதமாகப் பேச்சை வளர்க்கிறாளே ; இன்னும் என்ன என்ன கன்ன வார்த்தைகளை அள்ளி வீசப் போகிறாளோ? அவள் போகாததால், "துஷ்டரைக் கண்டால் தூர விலகு" என்ற ஒரு நியமத்தை இப்போது மேற்கொண்டு நாமே இந்த இடத்தை விட்டுப் போய் விடுவோம்' என்று எண்ணமிடுகிறான் ராமன். இந்தப் பண்பாடு அரக்கிக்குப் புரியுமா ?

மின்னலைத் தொடர்ந்த மேகம்

சீதையின் இதயம் அறிந்து கொள்கிறது. உடனே பர்ணசாலைக்குப் போகிறாள். ராமனும் தொடர்ந்து போகிறான். இந்தக் காட்சியை ராமனுள்ளத்தில் வீசும் நினைவு—மின்னல்களுடன் அப்படியே கவிஞன் காட்டக் காண்கிறோம்:

'தன்னொடும் தொடர்வி லாதேம்
  என்னவும் தவிராள் தான்,இக்
கல்நெடு மனத்தி சொல்லும்
  கள்ளவா சகங்கள்!' என்னா,
மின்னொடு தொடர்ந்து செல்லும்
  மேகம்போல், மிதிலை வந்த
பொன்னொடும் புனிதன் போய்,அப்
  பூம்பொழிற் சாலை புக்கான்.

[தொடர்வு இலாதேம் — உறவு கொள்ள மாட்டோம். தவிராள் — விட்டுப் போகிறாள் இல்லை. கல்நெடு மனத்தி — கல்லைப்போல் கொடிய மனதை உடைய அரக்கி. சொல்லும் — சொல்லிக் கொண்டே இருப்பாள். என்னா — என்ற எண்ணி. மிதிலை வந்த பொன் — சீதை. புனிதன் — புண்ணிய மூர்த்தியான ராமன். பூம்பொழிற்சாலை — அழகிய சோலையினிடையே அமைக்கப்பட்ட பர்ணசாலை. புக்கான் — போனான்.]

பாட்டின் பிற்பாதியைப் பாடப்பாட, மின்னல் போல் ஒளி வீசிப் பர்ணசாலைக்குள் புகுந்து மறையும் சீதையையும், மின்னலைத் தொடர்ந்து போகும் நீலமேகம் போல் நிதானமாய்ச் செல்லும் ராமனையும் வாசகர் தம் சித்த ஆகாசத்திலே கண்டு கொள்ளலாம்.

'எல்லாம் போச்சு!'

ராமனும் பர்ணசாலைக்குள் மறைய, இன்னும் சூரியாஸ்தமனமாக வில்லை, எனினும்—காரிருளுக் கிடையே மின்வெட்டி மறைந்த பின் அந்த இருள் முன்னிலும் இருண்டு காண்பதுபோல், ஒரே அந்தகாரமாய்க் காண்கிறது உலகம் சூர்ப்பணகைக்கு! உபேட்சித்துச் சென்ற ராமனோடு அறிவும் போய்விடுகிறது. ராமன் போய்விட்டது, உயிர்போன மாதிரி ஆகிவிடுகிறது. மூச்சடங்கச் செயல் ஒடுங்க 'எல்லாம் போச்சே!' என்ற நிலையில் அப்படியே நின்றுவிடுகிறாள்.

கொஞ்ச நேரம் கழித்து உணர்ச்சி வந்ததும், 'ஐயோ, அழகிற்குத் தகுந்த குணம் இல்லையே! கொஞ்சமும் நம்பிக்கை அளிக்கவில்லையே! நம்மிடம் கோபமும் கொண்டான். அந்தப் பெண்ணிடம் தான் எவ்வளவு காதல்!' என்று எண்ணுகிறாள்:

புக்கபின், 'போய(து)' என்னும்
  உணர்வினள்; பொறையுள் நீங்கி
உக்கதாம் உயிரள்; ஒன்றும்
  உயிர்த்திலள்; ஒடுங்கி நின்றாள்;
'நக்கிலன், மனத்துள் யாதும்
  தழுவிலன், சலமும் கொண்டான்;
மைக்கருங் குழலி னுள்மாட்(டு)
  அன்பினின் வலியன்' என்பாள்.



[புக்கபின் – (ராமன் பர்ணசாலைக்குப்) போனபின். போயது – (எல்லாம்) போச்சே. பொறை – (இங்கே) உயிரைத் தாங்கிக் கொண்டிருக்கும் உடம்பு. உக்கதாம் உயிரன் – உயிர் போய்விட்டது என்று சொல்லும்படியான நிலையை யடைந்தவள். ஒன்றும் உயிர்த்திலன் – மூச்சும் இல்லாதவனாகி. தக்கிலன்–தகுதிக் குணம் இல்லாதவன். சலம்–தணியாத கோபம். மைக்கருங் குழலினாள் மாட்டு – மைபோலக் கரிய கூந்தலையுடைய அப்பெண்ணிடத்து. வலியன் – உறுதியுடையவன். என்பான் – என்று எண்ணத் தலைப்பட்டான்.]

அரக்கியும் போகிறாள் அந்தி வந்தது

இப்படி யெல்லாம் நினைக்க நினைக்க, வேதனை பொறுக்க முடியாமல் போகிறது. ‘இனி இங்கே நின்று கொண்டிருப்பதில் பயனில்லை. ராமனை எப்படியாவது அடைந்துதான் தீரவேண்டும். இல்லாவிட்டால் உயிரே தீர்ந்துபோய்விடும்’ என்ற ஆத்திரத்துடன் பதபதவென்று நெஞ்சு பதைக்கப் பட படவென்று நடந்து போகிறாள்.

பொன்திணி சரளச் சீதப்
　　பளிக்கறைப் பொதும்பர் புக்காள்;
சென்றது பரிதி மேல்பால்,
　　செக்கர்வந்(து) இறுத்த தன்றே.

[பொன்திணி – பொன்மயமான தளம் அமைந்திருக்கும். சரளச் சீதப் பளிக்கறை – இனிமையாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கும்படி அழகிய பளிங்கினால் கைச்சுவர் எடுத்து அமைத்த வசந்தமேடை. பொதும்பர்– பூங்கொடிப் பந்தல். புக்காள் – புகுந்தாள். பரிதி – சூரியன். மேல்பால் – மேற்குத் திசையில். செக்கர் – செவ்வானம். வந்து இறுத்தது – பரவி விட்டது.]

சூரியன் அஸ்தமித்துச் செவ்வானம் தோன்றுகிறது. பூங்கொடிகளால் அமைந்த ஒரு பந்தலுக்குக் கீழே பளிங்கினால் செய்த வசந்த மேடை. பொன்னிறமான தளத்துடனும் அழகான கைப்பிடிச் சுவருடனும் வசதியாக அமைந்திருக்கிறது. அந்த அறைக்கு வந்து சேருகிறாள் சூர்ப்பணகை.

கதை போகும் அழகைத்தான் பாருங்கள்



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

248. மோகத்திற்கு முடிவும் உண்டோ?

சூர்ப்பணகைக்குத் தான் எத்தனை சத்துருக்கள்? சீதைதான் சத்துருவென்றால், சீதைமீது அன்பினால் ராமனும் அப்படித்தானே? இப்போது அந்திநேரமும் செவ்வானமும் சேர்ந்து பகையாளிகளுடன் சதி செய்கின்றன. இந்நிலையில் அரக்கியின் காதலுள்ளம் என்ன பாடுபடுகிறது! காதலோ ராட்சஸக் காதல்! ராட்சஸ உணர்ச்சிக்குத் தகுந்தபடி அந்த உள்ளமும் உடலும் அவஸ்தைப்படுகின்றனவாம், காமநோயால் — இல்லை, காமப் பேயால் ஆவேசிக்கப்பட்டு.

விஷாக்கினியா, ராமபாணமா?

'தலைக்கேறுகிறது விஷம்போல!' என்று சாதாரண விரகதாபத்தையே வருணிக்கலாம். இந்த ராட்சஸக் காமக் கடுங்கனல் பரவுவதையும் தலைக்கேறுவதையும் அப்படிச் சொன்னால் போதுமா?

அழிந்த சிந்தைய-
ளாய்அயர் வாள்வயின்,
மொழிந்த காமக்
கடுங்கனல் மூண்டதால்,
வழிந்த நாகத்தின்
வன்தொளை வாள்எயிற்(று)
இழிந்த கார்விடம்
ஏறுவ(து) என்னவே!

[அயர்வாள் வயின் — அயர்ந்து மயக்கத்துக்கு உள்ளாகும் சூர்ப்பணகையிடம். மொழிந்த — மேலே சொன்ன. வழிந்த — (இங்கு) நீண்டு நெளிந்து கிடந்த. வல் தொளை — கொடிய தொளையுள்ள. வாள் எயிற்று — கூர்மையான பல்லிலிருந்து. இழிந்த — வடிந்த. கார்விடம் — கரிய விஷம்.]

தாடகை என்ற கொடிய அரக்கி மீது ராமபாணம் பாய்ந்தது போலப் பாய்கிறதாம் மன்மதபாணம் சூர்ப்பணகை மீது.

தாட கைக்கொடி—
யாள்தட மார்பிடை
ஆட வர்க்(கு)அர—
சன்அயில் அம்புபோல்
பாட வத்தொழில்
மன்மதன் பாய்கணை
ஓட,— உட்கி
உயிர்உளைந் தாள்அரோ !

[ஆடவர்க்கு அரசன் – புருஷோத்தமனான ராமன். அயில் அம்பு - கூர்மையான பாணம். பாடவத் தொழில் - திறமையோடு செய்யும் போர்த் தொழில். கணை-அம்பு. உட்கி - அஞ்சி; ஒடுங்கி. உளைந்தாள்-வருந்தினள்.]

பௌர்ணமியும் சதி செய்கிறது

சீதை, ராமன், அந்திவேளை முதலான சதிகாரர்களுடன் மன்மதனும் சேர்ந்து கொண்டானும். பௌர்ணமி இரவு : பூர்ண சந்திரனும் சேர்ந்து



என்று திரிஜடை பிடிகை போட, உடனே சீதையைச் சூழ்ந்து கொண்டிருந்த அரக்கியர் திரிஜடையைச் சூழ்ந்து கொண்டார்களாம். கோபக்காரிகள் பயம் பிடித்தவர்களாய், 'அந்தக் கனவை எங்களுக்கு விவரமாகச் சொல்லு' என்று கேட்டார்களாம். அப்பால் திரிஜடை 'கேளுங்கள்' என்று தான் கண்ட கனவினை விவரிக்கத் தொடங்கினுள் என்கிருர் வால்மீகி.

கனவை விவரித்துவிட்டு, 'ராமன் விரைவில் வந்து சீதையை மீட்டுக் கொண்டு போவான்' என்ருள் திரிஜடை. 'ஒடிப் போங்கள்; எங்கேயாவது ஒளித்துக் கொள்ளுங்கள்' என்று கூடப் பயமுறுத்திப் பார்த்தாள்.

காப்பாற்ற வேண்டுமென்று சீதையை நோக்கிப் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள் என்றும் புத்திமதி சொன்னுள்.

'இவளுடைய சுபாவம் இவளுக்குத் தெரியாது. இவளை ஒருவன் சரணமடைந்தாலே போதும்; அவனுடைய தவறுகளை யெல்லாம் மறந்து பரம உபகாரம் செய்வாள். ஆகையால் நம்மைக் கோரமான ஆபத்திலிருந்து காப்பாற்ற இவளுக்கே திறமையுண்டு' என்று திரிஜடை கூறுவதாகவும் வால்மீகம் அறிவிக்கிறது. இந்தக் கருத்து எப்படிக் கம்பனுள்ளத்தில் ஊறி,

> நல்லாள் நல்ல
> கண்கள் கலுழ்ந்தே
> நகுகின்ருள்

என்ற ஒரு புத்தப் புதிய கலா சிருஷ்டியாக மாறிப் பிறந்திருக்க வேண்டும்!

இயற்கைச் சித்திரமும் கலைச் சித்திரமும்

சீதை ராவணனுக்கு அறத்துறை கூறிய போக்கிலும், வால்மீகிக்கும் கம்பனுக்குமுள்ள வேற்றுமையை ஒருவாறு கண்டோம். சீதைக்கும் ராவணனுக்கும் இடையே நிகழ்ந்த சம்பாஷணையை ஆறு வினவிடைகளாகக் கலாரஸிகர் ஸ்ரீ வி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் காட்டியுள்ளார். அந்த வினவிடைகளில் வால்மீகி சித்திரம் இனிது விளங்கக் காணலாம். ஆனல் அத்தகைய கம்ப சித்திரத்தை அப்படி ஒரு வினவிடைக் கூட்டில் அமைத்துக் காட்ட இயலாது.

ராவணன் சீதையைப் பயமுறுத்திய கட்டத்திலோ கம்ப சித்திரம் கலையுலகிலேயே ஒரு புதுமைக் கற்பனை. வால்மீகியின் இயற்கைச் சித்திரத்திற்கும் கம்பனின் கலைச் சித்திரத்திற்கும் உள்ள வேற்றுமையை இரண்டு சித்திரங்களையும் உற்று நோக்கி உணர்ந்து கொள்ள வேண்டியதுதான்.

அரக்கியர் சீதைக்குப் போதிப்பதும், சீதையை உபத்திரவிப்பதுமாகிய கட்டத்திலே கம்பன் விசேஷமான கலைத் திறமையை வெளியிட்டிருக்கிருனென்று சொல்ல முடியாது.

இனிமேல் சீதை உயிர் துறக்க முயல்வதும், அனுமன் சீதையிடம் பேச நிச்சயிப்பதுமான ஒரு கட்டம் வரப் போகிறது. சுந்தர காண்டத்திலே மிகவும் முக்கியமான ஒரு கட்டம்.

இதை அடுத்துத்தான் 'கணையாழி கொடுப்பது' என்ற சுந்தர காண்ட உயிர்நிலை. கணையாழி கொடுப்பதும், அனுமன் சூடாமணி பெறுவதும் சுந்தர காண்டத்தின் அதிவிசேஷமான உயிர்ப் பகுதி என்பது நம்மவர் நம்பிக்கை.

இந்த இதிகாசப் பகுதியை வால்மீகி, கம்பன் என்ற இரண்டு மகா கவிகளும் எவ்விதமாக அமைத்துக் காட்டுகிருர்கள் என்பதைப் படிப் படியாக இனி வரும் வாரங்களில் பார்க்கலாம்.

இன்னே ரன்ன
எய்திய காலந் —
திடை, நின்றாள்,
'முன்னே சொன்னேன்
கண்ட கனவின்
முடிவம்மா !
பின்னே வாளா
பேதுறு விரேல்
பிழை ' என்றாள் ;
'அன்னே ! நன்(று) 'என்—
றார், அவ ரெல்லாம்
அறிவுற்றார்.

[இன்னேரன்ன - இப்படிப்பட்ட காரியங்கள். எய்திய காலத்திடை — நேரிட்ட காலத்தில் ; நேர்ந்தபோது. நின்றாள் - அங்கு நின்றவளாகிய திரிஜடை. வாளா — வீணாக. பேதுறு விரேல் — உங்கள் பேதைமைக் குணத்தால் அவளை மருட்டினால். அன்னே — தாயே. அறிவுற்றார் — ஒருவாறு அந்தச்சமயத்திற்கு அறிவுபெற்று உடன்பட்டார்கள்.]

வால்மீகத்திலே

'முன்னே சொன்னேன் கண்ட கனவின் முடிவம்மா!' என்று இங்கே குறிக்கப்படும் கனவைத் திரிஜடை முன்னே சொல்லவில்லை, இப்போது, இந்தச் சந்தர்ப்பத்திலேதான் சொல்லுகிறாள் என்பது வால்மீகம்.

ராவணன் சென்ற பின்பு அரக்கியர் உபத்திரவிக்கச் சீதை துக்கித்து, 'நான் உயிர் விடுவதே சிறந்தது' என்று பிரலாபித்தாள். இந்தச் செய்தியைச் சில அரக்கியர் ராவணனிடம் தெரிவிக்க ஓடினார்கள். பிறகு மற்ற அரக்கியர் சீதையைச் சூழ்ந்து கொண்டு, 'நீ தற்கொலை செய்து கொண்டு எங்களிடமிருந்து தப்பப் பார்க்கிறாயோ? உன்னை நாங்கள் இப்போதே கொன்று உன் மாமிசத்தைப் பங்கிட்டு உண்ணப் போகிறோம்' என்றனர். இத்தருணத்திலே திரிஜடை குறுக்கிட்டுக் கனவுரைத்ததாக வால்மீகம் கூறுகிறது.

'நீங்கள் உங்களைத் தான் தின்று கொள்ள வேண்டும். இப்போது தான் ஒரு பயங்கரமான கனவு கண்டேன்'





சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

249. கனலா, மலரா ?

‘இனி மருந்து பயன்படாது ; நம்ப வழியில்லை’ என்று வைத்திய நிபுணர்கள் கைவிட்ட போதிலும், உயிர் எளிதில் உடம்பைவிட்டு நீங்காமல் இருப்பதற்கு ஒரு வழி, ஓர் உபாயம் — ஏன், ஒரு சஞ்சீவி மருந்து — நோயாளி யிடத்திலேயே கிடைக்கக் கூடியதாக இருக்கிறதாம். அது உள்ளுக்குள்ளே, நோயாளியின் உள்ளத்திற்குள்ளே இருக்கிறது. அந்தச் சஞ்சீவிக்குப் பெயர் தான் வாழ்வுக் காதல் — ‘வாழலாம் எனும் ஆசை’. இது மனோதத்துவ நிபுணர்களோடு சாமானியர்களும் அனுபவத்தில் கண்டு கொள்ளும் உண்மை.

காதலாகிய ஆசைத் தத்துவத்திலும் இந்த அமுத சஞ்சீவிதான், ‘காதல் சாதலாகித் தீர்ந்தது’ என்று ஏற்பட்டு விடாமல் உயிரைக் காத்து வருகிறது. இந்த மானஸ சாஸ்திர அனுபவத்தைச் சூர்ப்பணகை வாயிலாகக் கவிஞன் வெளியிடுகிறான் :

ஊழி வெங்கனல்
    உற்றனள் ஒத்தும், அவ்
ஏழை ஆவி
    இறந்திலள் என்பரால் :
ஆழி யானை
    அடைந்தனள் பின்னையும்
வாழ லாம்எனும்
    ஆசைம ருந்தினே !

[உற்றனள் ஒத்தும் — அகப்பட்டவள் போல் அவஸ்தைப்பட்டும். ஏழை — பேதைப்பெண். ஆழியானை அடைந்தனள் — ராமனை அடைந்தவளாய். மருந்தினே — மருந்தினால்.]

ஆசைநோய்க்கு அந்த ஆசையிலேயே ஓர் அருமருந்தும் கிடைத்து விடுகிறதாம்.

ஆனால் மரணவஸ்தை

'ராமனை அடைந்து வாழலாம்' என்ற அந்த ஆசையிலேயே, ராமனது வடிவத்தைப் போன்ற ஒரு பொய்த் தோற்றமும் தோன்றுகிறது. அந்த உருவத்தை நோக்கி இவள்,

> 'அஞ்ச னக்கிரி—
> யே! அரு ளாய்' எனும்;
> நஞ்சு நக்கினள்
> போலந டுங்குவாள்.

[அஞ்சனக்கிரியே—நீலமலையே.]

> நஞ்சு நக்கினள்
> போல நடுங்குவாள்

என்று அந்த நடுக்கத்தையும் அவஸ்தையையும் எவ்வளவு சுலபமாய்க் காட்டி விடுகிறான் கவிஞன்! மயக்க பாவம், நடுக்க பாவம் என்ற இரண்டு பாவங்களையும் ஒரு சேரப் பார்க்கிறோம் இந்தச் சிற கவிதைப் பகுதியில்.

ஆசை நிராசையாகிறது

உருவெளித் தோற்றத்திலே ராமனைக் கண்டவளுக்கு அவன் அருள் செய்யவில்லை; அருள் செய்யாது மறைந்து போகிறான். பிறகு சீதை ராமனை வந்தடைந்த ஞாபகம் வருகிறது. தன்னை அருளி நோக்காதவன் அவளைப் பேரன்புடன் பார்த்த அந்த நிகழ்ச்சியும் நினைவிற்கு வருகிறது. அந்தச் சீதை ராமனைப் பார்த்த பார்வையும் ஞாபகம் வருகிறது. மறுபடியும் புலம்புகிறாள்:

> 'காவி யோ? கய
> லோ? — எனும் கண்ணிணைத்
> தேவி யோ, திரு
> மங்கையிற் செவ்வியாள்;
> பாவி யேனையும்
> பார்க்கும் கொலோ?' எனும்
> ஆவி ஓயினும்
> ஆசையின் ஓய்விலாள்!

[காவியோ — நீலோற்பலம்தானோ. கயலோ — கயல் மீன்தானோ. திருமங்கையிற் செவ்வியாள் — லட்சுமிதேவியைவிட அழகிற் சிறந்தவள்.]

'மகாலட்சுமி தேவியும் அழகிற்குப் பிச்சை வாங்க வேண்டியது தான் இந்தத் தேவியிடம்! அப்படி ஒருத்தி இருக்கும்போது கதியற்ற என்னையும் கண்ணெடுத்துப் பார்க்கவா போகிறான்?' என்று ஏங்குகிறாள். அந்த ஏக்க பாவம், 'காவியோ, கயலோ' 'தேவியோ' 'ஆவி ஓ —' என்ற சப்த ஜாலங்களினிடையே பெருமூச்சு விடுவது காணலாம்.

பாவபுண்ணிய விவகாரங்களில் ஒரு சிறிதும் நம்பிக்கை யில்லாத இந்த அரக்கியும் தன்னைப் 'பாவியேன்' என்று சொல்லும்படியாகச்

செய்து விட்டது ராம சௌந்தரியம். ‘இப்படி விதி கெட்டவளாகவும் கதியற்றவளாகவும் போய் விட்டேனே, அதனால் நான் பாவியாகத்தான் இருக்க வேணும்’ என்ற மன நிலையைப் பார்க்கிறோம்,

> பாவி யேனையும்
> பார்க்குங்கொ லோ ?

என்ற பிரலாபத்திலே.

இப்படி யெல்லாம் புலம்பும்போது, ஆவி ஒய்ந்து ஒய்ந்து வெளியேறுவதுபோல் இருக்கிறது; எனினும் ஆசை மனசை விட்டுப் போகிறதாக இல்லையாம். ‘வாழலாம் எனும் ஆசை மருந்தி’னால் ஆவி போகாமல் பிழைத்துக் கொண்டது என்று செய்தி சொன்ன கவிஞன் விரைவில்,

> ஆவி ஒயினும்
> ஆசையின்
> ஒய்விலாள்

என்று காட்டி முடிக்கிறான். இந்தத் துன்பியல் — காட்சியில் திரை விழுகிறது.

இருளின் திரை நீங்க, சூரியன் உதயமாகிறான். அந்த உதயத்திற்கு உபமானம் தேடிக்கவிஞன் வெகு தூரம் போகவில்லை. கதைப்போக்கிலேயே உவகையோடு உவமை காட்டி இந்த ராமநாடகக் காட்சிகளிலும், ராமாவதார ரகஸ்யத்திலும் நம்மை ஈடுபடுத்துகிறான் :



மூன்று லோகமும்
மூடும் அரக்கராம்
என்ற காரிருள்
நீக்க,இ ராகவன்
தோன்றி னானென,
வெய்யவன் தோன்றினான்.

[என்ற கார் இருள் — நெருங்கிப் பொருந்திய கரிய இருள். வெய்யவன் — சூரியன்.]

நம்பிக்கையும் உதயமாகிறது

அரக்கியின் காதல் இப்படி வரம்பு கடந்து படாதபாடு பட்டுக் கொண்டிருக்கையில், 'இந்தத் தாங்கமுடியாத கஷ்டங்களுக்கு முடிவே இல்லையா? இந்த இரவுக்கும்தான் விடிவு இல்லையா?' என்று இவளுக்கும் தோன்றுகிறது, நமக்கும்தான் தோன்றுகிறது. எப்படியோ இரவும் ஒய்ந்து, சூரியோதயமும் ஆகிறது.

அப்போது தன் உயிர் உடம்பைவிட்டு நீங்கவில்லையென்று கண்டு கொண்ட சூர்ப்பணகைக்குச் சூரிய உதயத்துடன் ஒரு புதிய நம்பிக்கையும் உதயமாகிறது. இருள் கழிந்ததுபோல் மோகமயக்கங்களும் அவஸ்தைகளும் ஒருவாறு கழிய, இளஞ்சூரியனுடன் முகங்காட்டிய இந்தப் புதிய நம்பிக்கைதான் என்ன? அடுத்த வாரம் பார்க்கலாம்.

அதற்கிடையே, அந்த நம்பிக்கையின் உத்ஸாக பாவத்தை இப்போதே இந்தப் பாட்டிலேயே அனுபவிக்கலாம். மீண்டும் பாடிப் பாருங்கள். 'இராகவன் — தோன்றினான் என வெய்யவன் தோன்றினான்' என்று பாடி முடிக்கும்போது, 'ராமன் இருக்கிறான், இவளுக்கு நம்பிக்கையும் இருக்கிறது' என்ற உணர்ச்சி தொனிக்கிறது.

ஆனால் இந்த நம்பிக்கை யெல்லாம் கனலை மலரென்று கருதும் மதிமயக்கம் தான்!

மூன்று லோகமும்
மூடும் அரக்கராம்
என்ற . கார்இருள்
நீக்க
அல்லவா ராகவன் தோன்றியிருக்கிறான்?



சித்திர ராமாயணம்

அரக்கியின் காதல்

பி.ஸ்ரீ

250. சூழ்ச்சியும், கோபவெறியும்

'அவள் அருகிலுள்ள மட்டும் அவன் என்னைப் பாரான், ஆகவே அவளைத் தூக்கிக்கொண்டு போய் ஓரிடத்தில் ஒளித்து வைக்க வேண்டும்' என்பது சூர்ப்பணகையின் புதிய ஆலோசனை. எவ்வளவு லேசான காரியம்! இது என் அந்த மூளையில் இதற்கு முன் உதயமாகவில்லை?

'நம் காரியம் வெற்றிதான்'

ராமனை அடைந்து வாழும் இந்த உபாயம் இரவிலே விளங்காமலிருந்து காலைக் கதிரொளியில் விளக்கம் பெற்றது. அந்த இளங் கதிர்களே ஓடி வந்து உபாயம் சொன்னது போலத் தோன்றியது. ஆம், விரகமேலிட்டால் இரவில் விளங்காதது, பொழுது புலர்ந்து மோகம் ஒருவாறு மட்டுப்பட, விளங்குவதாயிற்று.

சிந்தனை செயலாகிறது சூர்ப்பணகைக்கு. விரைந்தோடினள் பர்ணசாலையை நோக்கி. கோதாவரி யாற்றங்கரையில் அழகியதொரு துறையிலே ராமன் நீராடிச் சந்தியாவந்தனம் என்ற காலைக்கடனில் ஒருமையுள்ளத்துடன் ஈடுபட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டாள். 'நல்லது, அவரோ நாம் வந்ததையும் கவனியாமல் மெய்ம் மறந்திருக்கிறார். இங்கே தம்பியும் இல்லை; சீதை தனித்திருக்கிறாள். தம்பி எங்கே போயிருந்தாலென்ன? நம் காரியம் வெற்றிதான்' என்று எண்ணினாள். இன்னும் எண்ணமிடுவதில் பொழுது போக்குவது சரியில்லையென்று செயலில் இறங்குகிறாள்:

வந்து நோக்கினள், வள்ளல்போய்
ஒருமணித் தடத்தில்
சந்தி நோக்கினன் இருந்தது
கண்டனள்; தம்பி
இந்து நோக்கிய நுதலியைக்
காத்(து),அயல் இருண்ட
கந்தம் நோக்கிய சோலையில்
இருந்தது காணாள்,—

[வள்ளல் — ராமன். தடம் — (இங்கே) ஆற்றங்கரையில் ஆற்றைத் தடாகம் போலத் தோன்றச் செய்யும் ஒரு துறை. சந்தி — சந்தியாவந்த னம். இந்து நோக்கிய நுதலி — பிறைச் சந்திரனை யொத்த நெற்றியளான சீதை. அயல்—அந்த இடத்தை ஒட்டியிருந்த. கந்தம் நோக்கிய —பரிம ளம் வீசப்பெற்ற.]

காணுள் — கண்டான்

ராமன் தியானத்தில் அமர்ந்திருக்கிறுன் என்பதை நன்ருகப் பார்த் துக் கொண்ட சூர்ப்பணகை, அந்தப் பர்ணசாலையை ஒட்டி அடர்ந்த நிழ லால் இருண்டு கிடந்த சோலைப் புறத்தில் தம்பி இருந்ததைப் பார்க்க வில் லையாம். 'கண்டனன்......காணுள்' என்று வரும் முரண்தான் எவ்வளவு அழகாய்த் தொடுக்கப் பெற்றிருக்கிறது இச் செய்யுளில்!

லட்சுமணன் இருந்த சோலைப் பகுதியில் கதிரவன் கதிர்கள் நுழையா ததால் அந்த இருட்டில் இருளடைந்த மனத்தினளான சூர்ப்பணகைக்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனுல் சீதைக்குப் பாதுகாவலாக அங்கேயிருந்த தம்பி சூர்ப்பணகையைப் பார்த்து விட்டான்.

'தனி இ ருந்தனள், சமைந்ததென்
சிந்தனை; தாழ்வுற்(று)
இனி இ ருந்(து)எனக்(கு) என்னுவ(து)
இல்'என எண்ணுத்,
துனி இ ருந்தவன் மனத்தினள்
தோகையைத் தொடர்ந்தாள்;
கனி இ ரும்பொழில் காத்(து)அயல்
இருந்தவன் கண்டான்.

[சமைந்தது - பலித்து விட்டது. தாழ்வுற்று — தாமதம் செய்து. இல் — இல்லை. எண்ணு — எண்ணினவளாய். துனி - (இங்கே)ஆங்காரமும் அடக்கமும் பொருந்திய மனநிலை. வன்மனம் — கொடிய மனம். தோகை - மயில் போலும் சாயலுள்ள சீதை. கனி இரும்பொழில் — கனிகளையுடைய அப்பெரிய சோலையில்.]

கலங்கல் — வெள்ளம்

சீதையைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று பாய்ந்து சென்ற அரக்கியை லட்சுமணன் பார்த்து விட்டான். இவளை முன்பு அவன் பார்த்ததே இல்லை. ராமனும் சீதையும் கூட இந்தக் கோர ராட்சஸி-வடி வத்தில் பார்த்ததில்லை. கோரப்பல் விளங்கக் கண்கள் நெருப்பு உமிழ (சூர்ப்பணகைப் படலம் 345) அரக்கி அந்தக் காலை வேளையில் திடீ ரென்று சீதை மேல் பாய்ந்ததும், மலை கலங்கினும் நிலை கலங்காத லட்சு மணனும் அந்த இருண்ட சோலையிலிருந்து நெருப்பு உமிழும் அந்த இருண்ட 'மாமிச மலை' கண்டு கலங்கித்தான் போயிருக்க வேண்டும்! 'சீதைக்கு எவ்விதமான ஆபத்து அந்தக் கொடிய அரக்கியால் ஏற்படுமோ? அந்தக் கூரிய கொடிய பற்களால் அந்த நரமாமிச பட்சணி சீதையைப் பட்சித்து விடுவாளோ? அல்லது எந்த ராட்சஸப் படையெடுப்பின் முன் னேடியோ அவள்?' என்றெல்லாம் அலைபாய்ந்த கோப எண்ணங்கள்

குழம்பிக் குமுறியிருக்க வேண்டும் தம்பியின் உள்ளத்திலே. (இந்த மன நிலையை ராமனிடம் லட்சுமணனே பின்னால் தெரிவிக்கப் போகிறான்.)

பெருங் கவலையோடும் கோபாவேசத்தோடும் முடுகி வந்த லட்சுமணன் வரும்போதே 'நில்லடீ !' என்று அதட்டுகிறான். வந்த கோபவெறியில் அரக்கியைக் கொலை செய்து விடுவான் என்றே தோன்றுகிறது. ஆனால்,

'நில்லடீ!' எனக் கடுகினன்,
பெண்ணென நினைந்தான்.

[கடுகினன் — விரைந்து, முடுகிவந்து.]

'பெண் கொலை பெரும் பாவம்' என்று எண்ணியதும் வில்லைக் கையில் எடுத்துக்கொள்ளாமல் தான் வந்தான். அரக்கியின் விரிந்து கிடந்த செம்பட்டை ரோமத்தை கையால் திருகிப் பறறிக்கொண்டான். பற்றிக்கொண்டு ஓர் உதை கொடுத்தானும் வயிற்றிலே. இந்தத் தண்டனையே போதுமென்று தோன்றுகிறது. அப்படியே தூக்கி யடித்திருக்கலாம் பேய்ப் பெண்ணை, 'பெண்ணென நினைந்த' தன் பெருந்தன்மைக்குப் பழுது வராதபடி.

கனல் — வெள்ளம் !

ஆனால் லட்சுமண கோபம் அல்லவா? ராமனுக்காகக் கைகேயித் தாயையும் தந்தையையும் கூடக் 'கொன்று விடுவேன்' என்று கொதித்தெழுந்த 'ஆறக் கனல்' அல்லவா? 'ஆறுக் கனல் ஆற்றும்' மேகமும் பக்கத்தில் இல்லையே! இப்போது ராமனுடைய தேவிக்காக 'நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும் ஆறுக் கனலில் ஈரம் ஏது ? வீர தர்மத்தையும் கடந்து விட்டதுபோல், சூர்ப்பணகையை அங்கபங்கம் செய்து விடுகிறான் உடைவாளை உருவி !

அப்படி லட்சுமணன் அங்கபங்கம் செய்வதற்குமுன், 'இவனையும் என் வலிமையால் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாய்ச் சென்றிடுவேன்!' என்று உக்கிரமாய்த் துணிந்து அப்படியே செய்யவும் தொடங்கி விட்டாளாம் சூர்ப்பணகை. ஆனால் லட்சுமண சக்திக்குமுன் அரக்கியின் வலிமையும் எளிமையாகி விட்டது. அதன்மேல் 'இனி இப்படிச் செய்யாதே, செய்யாதே' என்று புத்தி சொல்லிக் கொண்டே தன் புத்தியை இழந்து விட்டது போல்போகி விடுகிறது லட்சுமண கோபம்.



இந்தக் கோபம் என்ற சூறுவளியுடன் வீசிய காட்டுத்தீயைக் கம்பன் கவிதையும் பண்படுத்தாமல், நாகரிகப் படுத்தாமல், அப்படியே பயங்கரமாய்க் காட்டி விடுகிறது (சூர்ப்பணகைப் படலம் 94). உடைவாளால் மூக்கரிந்த கொடுங்கோபம் மேலும் மேலும் பொங்குவதை அந்தச் செய்யுளில் கண்டு கொள்ளலாம். லட்சுமண கோபமும் ராட்சஸ கோபம் போல் நம்மையும் பயமுறுத்தக் காணலாம். கோபம் என்பதே ராட்சஸ குணம் தானே?

போக்கிப், போக்கிய சினத்தொடும்
புரிகுழல் விட்டான்!

[போக்கி — அறுத்துப் போக்கி. போக்கிய சினம் — தணிந்த கோபம். புரி குழல் — சுற்றிப் பிடித்த தலை ரோமம்.]

என்று, அந்தத் தணியாத கோபம் தணிந்ததைக் காட்டுகிறான் கவிஞன்.

அரக்கி இரத்தம் சொரிந்து நோவு பொறுக்கமாட்டாமல் கால்களை உதறிக்கொண்டு கதறி அலறிக் கடுங் கூச்சலிடுகிறாள். இத்தகைய லட்சுமண கோபத்தை — சூர்ப்பணகையின் இக் கொடிய தண்டனையை — ராவண வதத்திர்கு நாள் செய்ததாகக் காட்டுகிறான் கவிஞன்:

மலைதுமித்தென இராவணன்
மணியுடை மகுடத்
தலைதுமித்தற்கு நாட்கொண்ட(து)
ஒத்ததோர் தன்மை

[மலைதுமித்தென — மலையைக் கொடுமுடி அல்லது சிகரம் துணித்தாற் போல. மணியுடை மகுடத் தலை — இரத்தின கிரீடம் அணிந்த தலைகள். நாள்கொண்டது — நல்ல நாள் பார்த்துத் தொடங்கி வைத்தது.]
